


# வையாளி - 3

**உயர் தர மாணவர் ஒன்றியம்**
**தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியின்**
**பிரிவுபசார மலர்**

**2020**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுட வாசகம்

கல்வி, ஒழுக்கம், தூய்மை

## Motto

Education, Discipline, Purity

## நோக்கு

அறிவு மிகுந்த உலகிற்கு ஈடு கொடுக்கத்தக்க தேர்ச்சி மிக்க பிரஜைகள்

## Vision

COMPETENT CITIZENS WHO COPE WITH THE ERUDITE WORLD

## பணி

களத்தில் நடப்பது கடந்தகால நிகழ்கால அனுபவங்களுடன் வருங்காலத்தின் சாவல்களை ஆராய்ந்தறிந்து மேம்பட்ட கற்றற் சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் அறிவும் திறனும், ஒழுக்கமும் உள்ள மாணவர்களை உருவாக்கிக் கொடுத்தல்

## Mission

TO CREATE KNOWLEDGE, SKILLFUL, DISCIPLINED AND HONEST STUDENTS BY PROVIDING AMELIORATED LEARNING OPPORTUNITIES THROUGH AN ANALYSIS OF THE EXPERIENCES OF THE PAST PRESENT AND THE CHALLENGES OF THE FUTURE.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

உவர்மலை கல்லூரி விவேகானந்தா வாழ்க
ஊதா வெள்ளைக் கொடி நிமிர்ந்தாட
உவர்மலை மக்கள் உவந்தளித்தனராம்
உயரிய செயலால் உளம் நிறைந்தனராம்!

ஒளியருள் கோணேசர் மலைமுடியில் – எங்கள்
எழில் தவழ் உவர்மலை கலை வடிவில்
கிளி மொழி தமிழ் எங்கும் வழிந்தோட – அதன்
கிருபையில் நாட்களும் கழிந்தோட!

கங்கா ஜமுனா காவேரி சிந்து
கற்பவரிடையே படை நான்கும்
எங்கள் திறமைகள் துலங்கிடுமே – அதன்
இனிமையில் பணிகளைத் தொடங்குவோமே!

உலகின் சிகரம் கல்வியென்போம் – அதன்
உண்மையை உணர்வோம் உயர்வடைவோம்
கலைகள் பலவும் வளர்த்திடுவோம் – என்றும்
கற்றதை மற்றவர்க் குணர்த்திடுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# School Details

Name of School : T/Orrs hill Vivekananda College

Address :Central Road, Orrs' hill, Trincomalee

Type of School : 1AB

School was Started on : 10.02.1978

School ID NO : 1701008

School Census No : 16058

Examination No : 29124

Province : Eastern

District : Trincomalee

Division : Troncomalee

Zone : Trincomalee

Divisional Secretariat : Town & Gravets, Trincomalee

Election No : 14 - Trincomalee

School Phone No : 026 222 2761

SDS No : 0002366381

Facilities Fees No : 0002366019

Postal No : 31000

Grama Sevakar Division No : 244/P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியிலிருந்து 2018ம் ஆண்டு தொடக்கம் வருடாந்தம் வெளிவரும் வையாளி சஞ்சிகைக்கு 2020ம் ஆண்டிலும் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவர்களின் சாதனைகள், பாடசாலைத் தகவல்கள், இவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் தகவல்கள், புகைப்படங்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஆக்கங்கள் என்பவற்றைக் கொண்டதாக இச் சஞ்சிகை அமைந்திருப்பது சிறப்பானதாகும்.

எதிர்காலத்தில் கல்லூரியின் தேவைக்காக வரலாறுகளைத் தேடும்போது இவ்வாண்டில் நடைபெற்ற விடயங்கள் மற்றும் உயர்தரத்தில் கல்வி கற்ற மாணவர்களின் தகவல்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வது இலகுவானதாக அமையும் என்பது எதிர்பார்ப்பாகும்.

இச்சஞ்சிகை வெளிவருவதற்கு பொறுப்பாளராக செயற்பட்ட ஆசிரியர் திரு.S.சிவசங்கரன் மற்றும் 2021ம் ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் உயர்தர வகுப்பு மாணவர்கள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித்தலைவர்கள், வகுப்பாசிரியர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள்.

மேலும் எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய இவ்வருடம் பரீட்சை எழுதவிருக்கும் அனைத்து மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று நல்லொழுக்கப் பண்புகளுடன் சமுதாயத்தில் மிளிர வேண்டுமென எனது உயர்வான நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.க.ரவிதாஸ்**
அதிபர்
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



எமது கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தால் கல்லூரி விடயங்களை ஆவணப்படுத்துகின்ற ஓர் சஞ்சிகையாக மூன்றாவது வருடமாக வெளிவருகின்ற வையாளி சஞ்சிகைக்கும் அதன் உருவாக்கத்திற்கு தங்களை அர்ப்பணித்து செயலாற்றுபவர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் புகழ் அகில இலங்கை முழுவதும் சிறந்து விளங்குகின்றது. அதற்கு ஏற்றால் போல் இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வாழ்வில் சிறப்பான நிலையினை அடைவதற்கும் நற்பிரஜைகளாக திகழ்வதற்கும் எனது மனமார்ந்த ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு.ம.பிரகாஷ்
பிரதி அதிபர் (அபிவிருத்தி)
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி

---

## வாழ்த்துச் செய்தி



பாடசாலைக் காலமென்பது எமது வாழ்வில் பொன்னான காலம். இப்பதின்மூன்று வருட காலத்திலே நாம் பலவற்றைக் கற்றிருக்கிறோம், பலவற்றைப் பெற்றிருக்கிறோம், அதேபோன்று பலரைச் சந்தித்திருக்கிறோம். பாடசாலையானது வெறுமனே ஏட்டுக்கல்வியை மட்டும் வழங்கும் ஒரு கூடமல்ல, மாறாக வாழ்க்கை அனுபவங்களையும், சவால்களை எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தையும் சேர்த்தே வழங்குகின்ற ஒரு சாலையாகும்.

எனவே, இக்காலத்திலே நீங்கள் கற்றுக் கொண்டவற்றையும், பெற்றுக்கொண்டவற்றையும் உங்கள் வாழ்வில் பிரயோகிக்கும் தனிப்பறவைகளாய் பாடசாலையைவிட்டு வெளியேறுகின்றீர்கள். உங்கள் வாழ்வு சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

"உங்கள் திட்டம் நிறைவேறாவிட்டால் திட்டத்தை மாற்றுங்கள் இலக்கையல்ல."

அன்புடன்

திரு. கு. தியோகுப்பிள்ளை
பிரதி அதிபர் (நிர்வாகம்)
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடங்கள்...


1. எமது கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் - 2020
2. கல்லூரிக் காலம்...
3. க.பொ.த உயர்தர பரீட்சை பாட பெறுபேற்று வீதம் - 2019
4. 2020இல் பரீட்சைக்கு தோற்றும் மாணவர் விபரமும் துறையும்
5. 2020ம் ஆண்டிற்கான இணைப்பாடவிதான சாதனையாளர் விபரம்
6. 2020 க.பொ.த உயர்தர பிரிவு மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர் விபரம்
7. மாணவர்களின் கவனத்திற்கு...
8. கல்வியின் சிறப்பு
9. மாணவர் பருவமும் அரசியலும்
10. இந்தப் பிரிவு நாளில்...
11. நீர் அமுக்க சக்தி மூலம் இயங்கும் செயற்கைக் கால்
12. மகிழ்ச்சி!
13. வேண்டாம் போதைப்பொருள்
14. கலங்கரை விளக்கு
15. கல்லூரி நாட்கள்
16. Mr. Corona Speking...
17. நீயே என் தாய்...
18. க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறு 1993 - 2019
19. பாரதியார் நற்சிந்தனைகள்
20. How thoughts influence in our Life
21. நீங்கா நினைவு
22. The last wish
23. மின்சார பௌத் (Electric Bouth)



**நூல் ஆக்கக் குழு:**

திரு.க.ரவிதாஸ் – அதிபர்

**இதழாசிரியர்**

செல்வன். த. சிவசங்கர்

**பொறுப்பாசிரியர்கள்**

திரு. சு. சிவசங்கரன்

**இதழ் குழு**

செல்வன். ச. சதுஸ்ரிகன்

செல்வன். நா. ருஜீந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் - 2020

தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியானது திருகோணமலையின் முன்னனி பாடசாலைகளுள் ஒன்றாகும். கண்ணகி அன்னையின் அருட்கடாட்சத்தாலும் சுவாமி விவேகானந்தரின் அருளாசியாலும் குறுகிய காலாப் பகுதியில் துரித வளர்ச்சி கண்ட பாடசாலையாக திகழ்கின்றது. இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக அதிபர் திரு.க.ரவிதாஸ் அவர்களும் ஆசிரியர்களும் அர்ப்பணிப்புடன் உழைத்து வருகின்றனர். பாடசாலையின் 2020 ஆம் ஆண்டு காலத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி பணிகள் வருமாறு.

முதலாவதாகவும் முதன்மையானதாகவுமாக மிக நீண்டகாலமாக செயற்படாமல் இருந்த கல்லூரியின் மாணவர் விடுதியானது அதிபர் திரு.க.ரவிதாஸ் அவர்களினது கடும் முயற்சியின் விளைவாக புனரமைக்கப்பட்டு வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றது. கல்லூரியின் மாணவர் விடுதியின் மூலம் கிராமப்புறங்களில் இருந்து உயர்கல்விக்காக வருகை தரும் மாணவர்கள் பயனடைகின்றனர்.

தற்பொழுது க.பொ.த உயர் தரத்திற்கு முன்னர் இருந்த மாணவர்களை விட இரு மடங்கு மாணவர்கள் வருகை தந்தமையால் தளபாட பற்றாக்குறை ஏற்பட்டது. இருப்பினும் அதிபர் அவர்களின் வழிகாட்டுதலின் மூலம் அப்பிரச்சினை தீர்க்கப்பட்டது. தற்பொழுது சகல மாணவர்களும் தளபாட பற்றாக்குறை இன்றி தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாடசாலையில் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருந்த குடிநீர் பிரச்சினை தற்பொழுது பூர்த்தி செய்யப்பட்டது. இதற்காக புதிதாக நீர் தாங்கி மூன்று கொள்வனவு செய்யப்பட்டதுடன் நீர் வழங்கல் குழாய்களும் தேவையான அளவுக்கு பொருத்தப்பட்டன. அத்துடன் விடுதிக்கான குழாய் கிணறும் அமைக்கப்பட்டுள்ளது.

COVID – 19 காரணமாக நாடு எதிர்கொண்ட அசாதாரண சூழ்நிலையின் நிமித்தம் பாடசாலையின் கற்றல் நடவடிக்கைகள் சுமார் 05 மாதமளவுக்கு ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்ட பின் மாணவர்கள் சுகாதார வழிமுறைகளையும் சமூக இடைவெளியும் பின்பற்றி கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சகல ஆசிரியர்களும் மாணவ தலைவர்களும் பொறுப்புடன் செயற்பட்டு வருகின்றனர். புதிதாக மாணவர் நலன் கருதி துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது.

எமது கல்லூரியில் கடந்த 04 வருடங்களாக நடைபெறாமலிருந்த பரிசளிப்பு விழா, எமது அதிபரின் அயராத முயற்சியினால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு நடாத்தி முடிக்கப்பட்டது. ஆரம்ப, உயர்நிலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைபாடவிதானம் என தொடர்ச்சியாக 03 நாட்கள் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் 876 மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வெற்றிக்கிண்ணங்களும் பரிசளிக்கப்பட்டன. இவற்றில் G.C.E.(O/L) பரீட்சையில் 9Aயும், G.C.E.(A/L) பரீட்சையில் 3A சித்திகளையும் பெற்ற 25 மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் கடந்த 05 வருடங்களாக எமது பாடசாலையிலிருந்து நாட்டின் நாலாதிசைகளிலுமுள்ள பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட 95 மாணவ மாணவியரும் பரிசளிப்பு விழாவின் போது வெற்றிக்கிண்ணங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு எமது கல்லூரிக்கும் எமது நட்பு பாடசாலையான விபுலானந்தா கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற ஆசிரியர்களுக்கான Net Ball போட்டியும் மாணவர்களுக்கான Cricket போட்டியும் நடைபெற்று அவற்றில் வெற்றியும் பெற்றுக்கொண்டனர்.

அத்துடன் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் இடம் பெற்ற குருளை சாரணர் தினத்தில் பங்குபற்றிய எமது சாரண மாணவர்கள் சிறப்புடன் செயற்பட்டனர்.

மேலும் பல்வேறு சாதனைகளையும் வளர்ச்சிகளையும் அடைந்து திருமலை மண்ணின் விடிவெள்ளியாய் சிறப்புடன் பிரகாசிக்க எம் கல்லூரியை வாழ்த்தியும் வணங்கியும் நிற்கின்றேன்.

| பரிசில்கள் விபரம் | வருடம் | பெற்றுக்கொண்ட மாணவர் தொகை |
|---|---|---|
| பாடரீதியான அடைவு மட்டம் | 2017-2018 | 222 |
| இணைபாடவிதானம் | | 203 |
| க.பொ.த. சா/தரம் (9A) | 2015 | 1 |
| | 2016 | 4 |
| | 2017 | 7 |
| | 2018 | 2 |
| க.பொ.த. உ/தரம் (3A) | 2015 | 4 |
| | 2016 | 5 |
| | 2018 | 2 |
| பல்கலைக்கழக அனுமதி | 2014 | 14 |
| | 2015 | 30 |
| | 2016 | 24 |
| | 2017 | 27 |
| ஆரம்பப்பிரிவு | 2017-2018 | 331 |
| மொத்தம் | | **876** |

என்றும் எம் கல்லூரித்தாயின் இதயத்தில்...

க. விஜிதரன்
(2021 வர்த்தகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Arts Stream - 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Biological Science Stream - 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Bio Systems Tech. Stream - 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Commerce Stream - 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Engineering Tech. Stream - 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Physical Science Stream - 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் காலம்...

உயிரைக் காக்கும் கோபுரமாய்
உத்தமர் பலரின் உறைவிடமாய்
உதயமானதே இவ்வுலகில்
உதிராப் பூவாம் கல்லூரி!

கற்பது எதோ கஷ்டமானதே
கலகலப்பிங்கே வெள்ளமானதே
கவலைகள் மறக்கும் அரங்காக
கலைமகள் அடியில் கிடந்தோம் நாம்!

கடவுளும் காணா அரிய காலம்
காலடியில் எமக்கு கிடைத்த காலம்
கல்லூரிக் காலம் - இதிலே
கவலை என்பது எங்குண்டு?

"அ" எழுத உதவினரே
அகராதியை எம்முள் புகுத்தினரே
அணையாது எரியும் மெழுகுகளாய்
அறிவுரை புகட்டும் ஆசான்கள்

கடவுள் என்னிடம் கேட்பாரோ?
கடைசி ஆசை என்னவென்று
கல்லூரிக் காலம் வேண்டுமென்ற
கலங்காமல் மனதில் வந்திடுமே !

"வளமான கல்லூரிக் காலம் - அது
நலமாக உமை வாழவைக்கும்"



செல்வி. ஜெனிபர்
2020 கணிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தரபாட பெறுபேற்று வீதம் - 2019

| No | Subject | Appli | No.of Sat | A | B | C | S | W | No.of Pass | Pass% |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **Bio Stream** | | | | | | | | | |
| 1 | Biology | 15 | 15 | - | - | 4 | 5 | 6 | 9 | 60% |
| 2 | Physics | 15 | 15 | - | - | 2 | 6 | 7 | 8 | 53.30% |
| 3 | Chemistry | 15 | 15 | - | 2 | 3 | 4 | 6 | 9 | 60% |
| | **Maths Stream** | | | | | | | | | |
| 1 | Com. Maths | 24 | 24 | 2 | 5 | 5 | 9 | 3 | 21 | 87.50% |
| 2 | Physics | 24 | 24 | - | 2 | 11 | 8 | 3 | 21 | 87.50% |
| 3 | Chemistry | 24 | 24 | 1 | 4 | 8 | 7 | 4 | 20 | 83.30% |
| | **Commerce Stream** | | | | | | | | | |
| 1 | Commerce | 31 | 31 | 7 | 3 | 6 | 12 | 3 | 28 | 90.30% |
| 2 | Business | 31 | 31 | 4 | 5 | 6 | 11 | 5 | 26 | 83.80% |
| 3 | Accounts | 31 | 31 | 7 | 2 | 4 | 6 | 12 | 19 | 61.20% |
| | **Arts Stream** | | | | | | | | | |
| 1 | Tamil | 14 | 14 | - | 1 | 6 | 4 | 3 | 11 | 78.50% |
| 2 | Hindu | 9 | 9 | 5 | 1 | 1 | 2 | - | 9 | 100% |
| 3 | Geography | 14 | 14 | - | 4 | 6 | 2 | 2 | 12 | 85.70% |
| 4 | Music | 4 | 3 | 1 | 1 | 1 | - | - | 3 | 100% |
| 5 | Dance | 1 | 1 | 1 | - | - | - | - | 1 | 100% |
| | **B.Tech Stream** | | | | | | | | | |
| 1 | In.Fo.Com | 2 | 2 | - | - | - | 1 | 1 | 2 | 50% |
| 2 | Bis Sys | 4 | 3 | - | - | - | 2 | 1 | 2 | 66.66% |
| 3 | Sci Fo Tech | 4 | 4 | - | - | - | 4 | - | 4 | 100% |
| 4 | Agri | 2 | 2 | - | - | 1 | 1 | - | 2 | 100% |
| | | | | | | | | | | |
| | **E Tech Stream** | | | | | | | | | |
| 1 | In.Fo.Com | 13 | 13 | - | - | - | 4 | 9 | 4 | 30.76% |
| 2 | Bis Sys | 14 | 11 | - | - | 1 | 7 | 3 | 8 | 72.72% |
| 3 | Sci Fo Tech | 14 | 14 | - | - | 1 | 12 | 1 | 13 | 92.85% |
| 4 | Agri | 1 | 1 | - | - | - | 1 | - | 1 | 100% |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2020இல் பரீட்சைக்கு தோற்றும் மாணவர் விபரமும் துறையும்

| கலைப்பிரிவு | |
|---|---|
| முழுப்பெயர் | முகவரி |
| உதயகமலன் ரிவிசாந் | 208/1ம் ஒழுங்கை, ஆனந்தபுரி |
| திலகராசா தருஸ்ணன் | 16A, 4ம் ஒழுங்கை, உவர்மலை. |
| சுதர்சன் ரேணுசன் | 43/08, ஆசிரியர் சதுக்க ஒழுங்கை, உவர்மலை |
| புவனபோஜன் டிலக்சன் | 263/7, அம்மன் கோவில் வீதி, லிங்கநகர் |
| பாஸ்கர் கரிகரன் | 46/26, 6ம் கட்டை, கப்பல்துறை |
| பிரபாகரன் துசாந் | 37/2, மத்திய வீதி, உவர்மலை |
| தங்கவேல் கரீசன் | நாயன்மார்திடல், தம்பலகமம் |
| மோகன் நிருஜன் | கோவிலடி, தம்பலகமம் |
| பாலகிருஷ்ணன் கஜேந்திரன் | 229/9, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை. |
| சிவகுமார் ருசாந் | கிண்ணியா, பாரதிபுரம் |
| நாகராசா விஜிதரன் | பாரதிபுரம், கிளிவெட்டி |
| யோகேஸ்வரன் டிலுக்சன் | பாரதிபுரம், கிளிவெட்டி |
| சிவஞான சுந்தரம் தனுஸ்கர் | பாரதிபுரம், கிளிவெட்டி |
| உத்தமசீலன் ஜதுர்சன் | 240/7, சிவன் வீதி, திருகோணமலை. |
| விஜேந்திரன் விதுர்சன் | 46, செல்வநாயகபுரம், திருகோணமலை. |
| யேந்திரன் நிதர்சன் | கட்டைப்பறிச்சான், மூதூர் |
| மோகதாஸ் சுதர்சன் | பன்மதவாச்சி, பன்குளம் |
| நேயநாதன் தனுஜன் | லியோன் கிளப், திருகோணமலை. |
| கிருஸ்ணதாஸ் அக்ஷதன் | 241A, கோணேசபுரம், உவர்மலை. |
| விஜயகுமார் ஜிலக்சனா | 33/28, சிவபுரி, திருகோணமலை |
| கிருஸ்ணமயில் தர்சிகா | 30/14, கண்ணகிபுரம், உவர்மலை. |
| சிவகணேசவேல் வேனுப்பிரியா | 8A, ஸ்பெல்வின் வீதி, உவர்மலை. |
| செல்வராசா தேனுஜா | புளியடிச்சோலை, கங்குவெலி |
| செந்தில்தாஸ் டிலோஜினி | புளியடிச்சோலை, மூதூர் |
| வில்வராஜன் நிவேதிக்கா | 6ம் கட்டை, பெரியகுளம் |
| ஜெசி கிறிஸ்கா | நிலாவெளி, திருகோணமலை. |
| விஜயநாதன் வர்க்ஷா | 72, 6ம் கட்டை, கன்னியா |
| ஜெயசங்கர் சுகஸ்தியா | சேனையூர், மூதூர் |
| பாலசுந்தரம் தயானி | டயகம கிழக்கு, டயகம |
| குமார்நாயகம் சுதர்சனா | 156, அன்புவழிபுரம், திருகோணமலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரியல் பிரிவு

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| கிரிதரன் சதுர்சன் | 106, லோவர் வீதி, உவர்மலை |
| உதயகுமார் சதுசிகன் | 28/10, லோவர் வீதி, உவர்மலை. |
| ஜெகமனோகர கண்ணா கோபிஷரன் | 401/2, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை |
| சசிதரன் சங்கீர்த் | 716, சகாயமாதா வீதி, அன்புவழிபுரம் |
| ஸ்ரீகாந்தன் யதுர்சன் | 23/4, மத்திய வீதி, உவர்மலை |
| அஜித்கேமந்த சுபோசனன் | 102, லோவர் வீதி, உவர்மலை |
| விமலகுமார் விதுர்சன் | பாரதிபுரம், கிளிவெட்டி, மூதூர் |
| தெய்வேந்திரன் நிலோஜ் | 28, மத்திய வீதி, உவர்மலை |
| பேரின்பராஜா சோதிகா | 25/15 C, 3ம் ஒழுங்கை, லிங்கநகர் |
| சுதாகர் சங்கவி | 3, 2ம் ஒழுங்கை, லிங்கநகர் |
| அமிர்தநாதன் தர்ஷனா | 5, நித்தியபுரி, 3ம் கட்டை, திருகோணமலை |
| மகேந்திரராஜா மதுசா | 225, அன்புவழிபுரம், திருகோணமலை |
| ரவீந்திரன் நிரஷ்சிகா | 23/11, லோவர் வீதி, உவர்மலை |
| சண்முகதாசன் ரக்சன்யா | 48/39, இராஜவரோதயம் சதுர்க்கம், கண்டிவீதி |
| யுவராஜ்குமார் கயானி | 176/40, லோவர் வீதி, உவர்மலை |
| மதிவதனன் சயனுஜா | 36/30, சிவபுரி, திருகோணமலை |
| பத்மநாதன் சுபாசினி | 60/12, பிரதான வீதி, புளியங்குளம், திருகோணமலை |
| கோணலிங்கம் நிவேதிகா | 122, பிரதான வீதி, வரோதயநகர் |
| ரூபசிங்கம் சங்கவி | 36, கந்தையா வீதி, வரோதயநகர் |

தொழில்நுட்பப் பிரிவு

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| கோணேஸ்வரன் கோவர்த்தனன் | 186/53, லவ்லேன், திருகோணமலை |
| கிருஷ்ணதாசன் ஹரிசாய் | 88/11, கணேஸ் லேன், திருகோணமலை |
| துஷியந்தன் துர்சாந்தன் | 19/C, மத்திய வீதி, உவர்மலை |
| கஜேந்திரகுமார் தனுசன் | 25, சமாது வீதி, திருகோணமலை |
| ஜெயாபரன் சந்தோஷ் | 454, அன்புவழிபுரம், திருகோணமலை |
| பத்மராசா நிரோசன் | 58, கோணேசபுரம், உவர்மலை |
| அகிலன் பகிரதன் | 664, முருகன் கோவில் வீதி, அன்புவழிபுரம் |
| சச்சிதானந்தம் கிருஷ்ணன் | தங்கபுரம், பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர் |
| சுகந்தன் திலக்சன் | 19/1, திருமால் வீதி, திருகோணமலை |
| சத்தியலிங்கம் பிரனித் | 133/3, தில்லைநகர், திருகோணமலை |
| சந்திரகுமார் ஜனகன் | 18/3, திருச்செல்வம் வீதி, லிங்கநகர் |
| காளிராசா கிஷாந் | 135, 3ம் ஒழுங்கை, ஆனந்தபுரி, திருகோணமலை |
| சதீஸ்குமார் யதுர்ஷன் | 39/37யு, சிவன் வீதி, திருகோணமலை |
| ஜெயகரன் ஹினுஷன் | பத்தினிபுரம், பாலம்பொட்டாறு, தம்பலகமம் |
| சோமசுந்தரம் சக்திவேல் | 8, பிரதான வீதி, புளியங்குளம், திருகோணமலை |
| குகேஸ்வரன் யதுர்ஷன் | 6ம் வட்டாரம், சாம்பல்தீவு, திருகோணமலை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித பிரிவு

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| உதயசீலன் கிரிசோத்மன் | 42, 4ம் ஒழுங்கை, உவர்மலை |
| சண்முகசிவனாந்தம் சியாள் | 33/3, விகாரை வீதி, திருகோணமலை |
| முகுந்தன் அக்ஷயன் | 158/18B, லோவர் வீதி, உவர்மலை |
| சித்திரவேலாயுதம் மிதுசாந் | 202, 1ம் ஒழுங்கை, ஆனந்தபுரி |
| கதிரமலைவாகனன் பமிதன் | 70/12, அந்தோனியார் வீதி, நித்தியபுரி |
| குணபாலசிங்கம் மிதுசாந் | 53/1, சிவன் வீதி, திருகோணமலை |
| ரவீந்திரன் நிலக்ஷன் | 48/95, இராஜவரோதய சதுக்கம், கண்டிவீதி |
| துளசிதாஸ் ஹரிஸ்சன் | 37, மயான வீதி, அன்புவழிபுரம் |
| கணேஸ் ஆனந்தன் துதேஸ் ஸ்டீவ்ராஜ் | 24/2, கோணேசபுரம், உவர்மலை |
| தேவராசா திவிசன் | 18, கோணேசபுரம், உவர்மலை |
| சந்திரசேகரம் பிரியலோசன் | 271, ஆனந்தபுரி, 3ம் கட்டை |
| ரகுநாதன் கிஷோத் | 29/18, மத்தியவீதி, உவர்மலை |
| வீரகுலசிங்கம் ரஷ்சுதன் | 37/2, சமாது லேன், திருகோணமலை |
| வசந்தகுமார் சஞ்சசைபிரபாகர் | 66, கதிர்காமத்தம்பி வீதி, வரோதயநகர் |
| ராகுலன் கபிஸன் | 241, அனுராதபுர சந்தி, திருகோணமலை |
| விநாயகமூர்த்தி சீரஞ்சீவி | 23, 3ம் குறுக்குத் தெரு, திருகோணமலை |
| சந்திரமோகன் டினேஸ்கா | 202/9F, லோவர் வீதி, உவர்மலை |
| அன்ரனிநியோஸ் ரோச் கர்ஷனா | 79, அந்தோனியார் வீதி, நித்தியபுரி |
| பவளராசா அர்ச்சனா | 54B, லோவர் வீதி, உவர்மலை |
| சந்திரலிங்கம் கஜீவினி | 192/9, லோவர் வீதி, உவர்மலை |
| ரொபின்சன் ஜெனியர் | 90, 2ம் ஒழுங்கை, ஆனந்தபுரி |

உயிரியல் தொழில்நுட்பப் பிரிவு

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| யௌவனராஜா லோஜன் | 20, கோணேசபுரம், உவர்மலை |
| கிளின்டன் டொமினிகஸ் ரொபின்சன் | 35, மயான வீதி, அன்புவழிபுரம் |
| சச்சிதானந்தம் யதுர்சன் | 25/11D, லிங்கநகர், திருகோணமலை |
| பிரான்சிஸ் ரெஜினோல்ட் | 20, சிவபுரி, திருகோணமலை |
| ஜெயச்சந்திரன் ரஜிந்தன் | 20, சிவபுரி, திருகோணமலை |
| செல்வேந்திரன் தமிழன்பன் | 70/3, திருமால் வீதி, திருகோணமலை |
| திவாகரன் டிருஷாந் | 70, 2ம் ஒழுங்கை, லிங்கநகர், திருகோணமலை |
| அமுகசாகரன் தமிழெழிலன் | 29, லிங்கநகர், திருகோணமலை |
| ஜெகநாதன் டினுஸ்காந் | 15, விகாரை வீதி, திருகோணமலை |
| ரவீந்திரன் விதுசன் | 166, சிவபுரம், தெகிவத்தை |
| கோணலிங்கம் கேதுஜன் | 36/64, கண்டி வீதி, சுமேதகம |
| லோகநாதன் ருசேந்ரன் | 14/11, உவர்மலை, திருகோணமலை |
| பத்மநாதன் சபீசன் | 256/38, உட்துறைமுக வீதி, திருகோணமலை |
| கிருஸ்ணமூர்த்தி டிலக்ஷன் | ஆனந்தபுரி, 2ம் ஒழுங்கை |
| மகேந்திரராஜா ரோமாசனன் | 146, ஆனந்தபுரி |
| சிவகுமார் சஜீவன் | 3ம் கட்டை, திருகோணமலை |
| இரவீந்திரன் யக்ஷிக்கா | நித்தியபுரி, திருகோணமலை |
| மகேந்திரராஜா அக்ஷரா | 44, விகாரை வீதி, திருகோணமலை |
| புவனேந்திரன் லெஷிகா | 70, கஸ்கிசன் வீதி, திருகோணமலை |
| கனநாதன் பத்மரூபினி | 1091, கண்டி வீதி, திருகோணமலை |
| சிறிதரன் டிலக்சனா | 65/6, பூம்புகார், பாலையூற்று |
| உதயகுமார் டிலக்ஷினி | 7B, அண்ணா வீதி, அன்புவழிபுரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகப் பிரிவு

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| யோகம் சஞ்சுதன் | 49, கோணேசபுரம், 4ம் ஒழுங்கை, உவர்மலை |
| திவாகரன் ஹரிஷியாம் | 364, ஏகாம்பரம் வீதி, திருகோணமலை |
| இராஜசேகரம் டனுசன் | 16, அம்மன் கோவில் வீதி, பாலையூற்று |
| கோபாலகிருஸ்ணன் கோகுலவரதன் | 24/48, கோணேசபுரம், மத்திய வீதி, உவர்மலை |
| கஜேந்திரன் கதீஸ்மன் | 297, அன்புவழிபுரம், திருகோணமலை |
| டேவிட்பிள்ளை வோரன்பிள்ளை | 68, ஆசிரியர் சதுக்கம், உவர்மலை |
| அருந்தவராஜா டிலக்ஷன் | 55/2, கோணேசபுரம், உவர்மலை |
| நிக்சன் லக்ஷன் | 18/3, கண்ணகிபுரம், 4ம் ஒழுங்கை, உவர்மலை |
| தர்மபாலன் கபிஷேக் | 65/A, அன்னைதெரேசா வீதி, 1ம் ஒழுங்கை, லிங்கநகர் |
| சந்திரன் சுஜித்ராஜ் | பாரதிபுரம், கிளிவெட்டி, மூதூர், திருகோணமலை |
| சுந்தரலிங்கம் ரதீபன் | 16/4, ஜோசுவா ஒழுங்கை, பாலையூற்று |
| இராசதுரை லக்ஷாந் | மேன்காமம், கிளிவெட்டி, மூதூர் |
| ரவீந்திரன் மதுசன் | மேன்காமம், கிளிவெட்டி, மூதூர் |
| மோகனசுந்தரம் விபுலன் | கட்டைப்பறிச்சான் - 03, மூதூர் |
| நந்தகோபலன் கௌசிகன் | 84/32, C.T.B. வீதி லவ்லேன், உப்புவெளி |
| புலேந்திரராஜ் சஜன் | 77/2, மயானவீதி, அன்புவழிபுரம், திருகோணமலை |
| ரமச்சந்திரன் ஹர்ஷானந்தன் | 29/27, மத்தியவீதி, உவர்மலை, திருகோணமலை |
| சிவபுண்ணியம் வசந்தராஜ் | 29, காந்திநகர், அன்புவழிபுரம், திருகோணமலை |
| லட்சுமணன் லதுஷனன் | 40, அன்புவழிபுரம், திருகோணமலை |
| கஜேந்திரன் பிரகாஷ்ராஜ் | 33A/17, முருகன் கோவில் வீதி, அன்புவழிபுரம், திருகோணமலை |
| ஜெராஜ் பவிசன் | 4ம் வட்டாரம், பன்குளம், |
| தர்சனன் அமிர்தனன் | 5, நித்தியபுரி, 3ம் கட்டை, திருகோணமலை |
| திவிசனா ராஜகாந் | 51, ஆனந்தபுரி, மத்தியவீதி, திருகோணமலை |
| தேனுஷா சுரேஸ் | 21B, மக்கேசர் வீதி, உவர்மலை, திருகோணமலை |
| விமலேந்திரன் சூரியவதனி | 25/5, அன்ரனி தேவாலயவீதி, சீனக்குடா, திருகோணமலை |
| கண்ணதாசன் வினுஜா | கரழிப்பூவல், வெள்ளைமணல், சீனக்குடா |
| குவேசனா மதியரசன் | 202/10, லேவர் வீதி, உவர்மலை, திருகோணமலை |
| ஜொய்ஸ் அம்சா | 836, மிகிந்தபுர, கன்னியாவீதி, திருகோணமலை |
| விஜயகுமார் தர்ஷிகா | 76/3A, 4ம் ஒழுங்கை, மத்திய வீதி, திருகோணமலை |
| செல்வகுமார் தர்சிகா | 11/1, திருச்செல்வம் வீதி, லிங்கநகர் |
| சாந்தகுமார் அனா அன்ரனிட்டா | 43/16, ஆசிரியர் சதுக்கம், உவர்மலை, திருகோணமலை |
| ரகுநாதன் சஞ்ஜீவா | 23/A, கண்ணகிபுரம், உவர்மலை, திருகோணமலை |
| பரசுராமன் துஷானி | 02, குச்சவெளி, திருகோணமலை. |
| செல்டன் மெபில்வேட் | 641, அன்புவழிபுரம், திருகோணமலை |
| ஓம்காரன் பவதாரணி | 536/76, மாதோட்டம், திருக்கடலூர் |

# 2020ம் ஆண்டிற்கான இணைப்பாடவிதான சாதனையாளர் விபரம்

**2019 Sathasivam Quiz** -3rd Place

R.Nerashika
C.Piriyaloshan
V.Rachsuthan
S.Mithushanth
G.Thudish Setev Raj

Individal Higher Perfomance - R.Nerashika
(Over Rall Top Marks)

**2019 Zonal Level Science Quiz** - 3rd Place

R.Nerashika
C.Piriyaloshan
V.Rachsuthan
S.Mithushanth
J.Gobisaran

Individal Higher Perfomance - R.Nerashika
(Over Rall Top Marks)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2020 TDUSA Quiz** - **2nd Place**

R.Nerashika
C.Piriyaloshan
V.Rachsuthan
S.Mithushanth
G.Thudish Setev Raj

Individal Higher Perfomance - R.Nerashika
(Over Rall Top Marks)

**2019 - Articals Writing - Peradeniya University**
**Participate & Certificate**

U.Sathusingam
P.Archana
M.Mithshanth
M.Mathusha
T.Niloge

| Name | | Class | Zone | Dist | Province | National |
|---|---|---|---|---|---|---|
| J.Priyasajena | Dance | | 1 | 1 | 2 | |
| P.Harikaran | 800m, 1500m, 400m | 16 Boys | 1, 1, 3 | | | |
| P.Thushanth | 5000m | 20 Boys | 2 | | | |
| G.Kokulavarathan | High Jump | 20 Boys | 3 | | | |
| T.Yoktha | Dictation | Gr - 6 | 3 | | | |
| K.Kovarthanan | Chees | 20 Boys | | | 2 | |
| K.Kathisman | | | | | | |
| D.Dilukshan | | | | | | |
| M.Keishman | | | | | | |
| J.Naveenraj | | | | | | |
| U.Krishothman | | | | | | |
| T.Anoth | Karati | 16 Boys | | | 2 | |
| U.Danushikan | Maths Quiz | Gr - 10 | | | Section | Section |
| S.Serubi | Bible Quiz | Gr - 11 | 1 | | 1 | 2 |
| D.Jebora | Bible Quiz | Gr - 10 | 1 | | | |
| D.Jerusha | Bible Quiz | Gr - 10 | 1 | | | |
| V.Vicknesh | Bible Quiz | Gr - 10 | 1 | | | |
| U.Thanushigan | Science Quiz | Gr - 10 | 1 | | | |
| M.Thanushan | Science Quiz | Gr - 8 | 1 | | | |
| B.Thanovan | Science Quiz | Gr - 7 | 1 | | | |
| T.Tharushnan | புத்தாக்கம் | 2020 Arts | | | | ஆறுதல் பரிசு |
| S.Harisan | புத்தாக்கம் | Gr - 11 | | | | ஆறுதல் பரிசு |
| V.Tharshanan | Art Compertion | Gr - 11 | | | Selected | |
| T.Rakshanya | Creative Writng | Gr - 13 | 2 | | | |
| R.Hrithikroshan | Carrom | 20 Boys | | | 1 | |
| K.Gobishan | | | | | | |
| K.Pavorshan | | | | | | |
| R.Harshanathan | | | | | | |
| U.Linojan | | | | | | |
| T.Nilukshan | | | | | | |
| M.Mithurshan | | | | | | |
| T.Dirushanth | வில்லுபாட்டு | | 1 | 1 | 3 | |
| T.Santhosh | | | | | | |
| A.Kobisanth | | | | | | |
| P.Keatharan | | | | | | |
| R.Sajiraj | | | | | | |
| P.Saron | | | | | | |
| K. Rubasiri | | | | | | |
| Nitharshan | Sithambara MTHS Quiz | | 1 | 1 | 1 | 3 |
| Sakthiyan | | | | | | |
| L. Brithavana | வணிகப் போட்டி | | 1 | | | 1 |
| R. Sakipthana | | | | | | |
| P. Sajilaxshan | | | | | | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| L. Brithavana | பல்கலை கழக | | | | | |
| R. Sakipthana | மாணவர் | | | | | |
| P. Sajilaxshan | ஒன்றியத்தால் | | | 2 | 1 | |
| S. Dilojan | நடாத்தப்பட்ட | | | | | |
| R. Kobinath | வணிகப் போட்டி | | | | | |
| S.Mirunalini | | Gr - 8D | | | | |
| R Varshali | | Gr - 8D | | | | |
| A.Tharuxsha | | Gr - 8D | | | | |
| T.Thanuja | | Gr - 8D | | | | |
| G.Gayathri | | Gr - 7B | | | | |
| A.Subani | | Gr - 7B | | | | |
| T.Yuktha | Music Group | Gr - 6C | 2 | 1 | 3 | |
| Pirarthana | | Gr - 6C | | | | |
| Kabiksha | | Gr - 6C | | | | |
| Kajeevini | | Gr - 6C | | | | |
| T.Dirushanth | | Gr - 13B | | | | |
| P.Sharon | | Gr - 11 | | | | |
| Theshigan | | Gr - 9 | | | | |

## 2020 க.பொ.த உயர்தர பிரிவு மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர் விபரம்

| Name | Subject |
|---|---|
| Mr.A.Ahilan | ICT |
| Mr.A.Ravindran | Tamil |
| Mr.B.Nirmalathasan | Chemistry |
| Mr.M.Pragash | Business Study |
| Mr.N.Thanushan | Engineering Technology |
| Mr.N.Umashanger | ICT |
| Mr.P.Konatharupan | Accounts |
| Mr.R.Ketheeswaran | Physics |
| Mr.S.Baskaran | Business Study |
| Mr.S.Kamaleshvaran | Combine maths |
| Mr.S.S.Venthan | Geography |
| Mr.S.Sivashanagaran | Biosystem Technology |
| Mr.V.Mohanaraja | Business study |
| Mrs.A.Janakan | English |
| Mrs.A.Jeyanthan | English |
| Mrs.A.Kantharupan | Economics |
| Mrs.B.Basksrsnthan | Chemistry |
| Mrs.C.Anusha | Music |
| Mrs.C.Subani | Dance |
| Mrs.C.Vijitha | ICT |
| Mrs.J.Vijithakumar | English |
| Mrs.K.Jeyabalini | Biology |
| Mrs.L.Yogaratnam | English |
| Mrs.P.Umamaheswaran | Agriculture |
| Mrs.P.Sahana | SFT |
| Mrs.R.Heyakumar | English |
| Mrs.R.Jeyakanthan | English |
| Mrs.R.G.Jeyakumar | English |
| Mrs.S.Manojkumar | Dance |
| Mrs.S.Msyuri | ICT |
| Mrs.S.Navaratnam | Hindu culture |
| Mrs.S.Prasanna | Science for Technology |
| Mrs.T.Gengatharan | Geography |
| Mrs.T.Rajanan | English |
| Mrs.V.Sarveswaran | Biology |
| Mrs.V.Uthayasuriyan | Account |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களின் கவனத்திற்கு...
## பொருத்தமான துறையை தேர்ந்தெடுத்தல்.

அறிவு கற்றலின் முதிர்வு, அனுபவம் வாழ்தலின் முதிர்வு, கற்று வாழ்தல் இரண்டிலும் உயர்வு. உயர்தரத்தில் எதிர்காலத் துறை தேர்வு தொடர்பான ஒரு பிழையான தத்துவம் பல மாணவரிடையே பதிக்கப்பட்டள்ளது. சீருடை, பாடசாலை, மாலைநேர வகுப்புக்கள், பாடப்புத்தகங்கள், பரீட்சை, அதிபர்-ஆசான்கள் எனும் ஒரு குறுகிய வட்டத்திலிருந்து அனேகமான மாணவர்கள் இன்னும் வெளிவரவில்லை.

பல்கலைக்கழகம், அங்கொருபாடம், அதனாலொரு பதவி எனும் வரம்புக்குள்ளேயே மாணாக்கர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இது தவறு என நான் தெரியப்படுத்தவில்லை. தற்காலத்தில் வெற்றிப் பயணத்திற்கான ஆயிரம் பாதைகளில் மேற்படி பாதையும் ஒன்று என்று சொல்லலாமே தவிர மாணாக்கர் அதில் மட்டும் தான் பயணிக்க முடியும் என வரையறை செய்து விட முடியாது என்பதே எனது கருத்து.

இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் வெவ்வேறு ஆற்றல்களுடனேயே பிறக்கிறார்கள். எனவே ஒருவர் இத்துறையில் தான் சாதிக்க வேண்டும் என யாரும் யாருக்கும் திணிக்க முடியாது. எனவே மாணவப் பருவத்திலேயே தங்களுக்கு இயலுமான ஆற்றல்களுக்கு ஏற்ற துறையினை இனங்கண்டு தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். ஆழமாய் சிந்தித்தால் தங்களால் எது இயலும் எனப் புரிந்து கொள்ள முடியும்.

பிறரால் நிச்சயிக்கப்பட்ட இலட்சியங்களை அடைந்து காட்டுவதை விடவும் எமக்குப் பிடித்த எம்மால் இயலுமான துறையினை எம் இலட்சியமாக்கிக் கொண்டால் இலகுவாக வெற்றி காணமுடியும். அமெரிக்காவின் வெற்றி முறை ஆலோசகரும் உளவியல் நிபுணருமான Dr.எம்.ஆர்.காப்மேயர் தனது நூலில் ஓர் இடத்தில் அவ்வாறு கூறியுள்ளார்.

"ஓர் குறிப்பிட்ட முயற்சியால் எவ்வளவு தூரம்
எப்படி செல்லலாம் என்பதை உங்கள் புத்தியைக்
கொண்டு அனுமானித்து முடிவு செய்வதே நல்லது
என்று நான் யோசனை கூறுகின்றேன்" எனவே மாணவர்களும் அவ்வாறே தமக்குப் பிடித்தமான இயலுமான துறைகளை தேர்ந்து அதில் சாதித்துக் காட்ட வேண்டும். பள்ளிக் கூடக் கல்வியில் நாட்டமில்லாத இரவீந்திர நாத்தாகூர் தமக்கு பிடித்தமான, இயலுமான துறையில், இலக்கியத்தில் ஈடுபாடு காட்டியதன் விளைவாகவே ஆசியாவுக்கு முதன்முதலில் நோபல் பரிசினைப் பெற்றுக் கொடுத்த "கீதாஞ்சலி" எனும் நூலை எழுத முடிந்தது.

அது மட்டுமா! பாரதியின் வரலாறும் அவ்வாறே தான் கணிதம் தெரியாத பாரதி தன் கவிதையால் உலகையே கணிக்கத் தொடங்கினார். இதனைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிப் பேரரசர் வைரமுத்து தமது "கவிராஜன் கதை" எனும் நூலில் அழகுறக் கூறியுள்ளார்.

"மகனுக்கு..........
கணிதத்தையும் ஆங்கிலத்தையும்
கலியாணம் செய்துவித்து
மேல் நாட்டு மருமகனாய்
ஆக்கிப்பார்க்க
ஆசை அவருக்கு,
பிள்ளையோ
கற்பனா தேவியின்
கந்தர்வ புருஷனாயிருந்தான்,

கவிதை
அவன் மனசுக்கு
ஒரு
பூவனத்துக்குள் நாற்றங்கால்
போட்டிருந்தது,

கணிதம் - அந்த
மருக் கொழுந்துக்கு
வேப்பங் கொழுந்தானது........."

அது மட்டுமா மூன்று மாதங்கள் மட்டுமே முறையாகக் கல்வி பயின்ற தோமஸ் அல்வா எடிசனின் வாழ்க்கையும் அவ்வாறானதே. அன்று எடிசனுக்கு பல்துறை புலமையும் ஆய்த்தறியும் ஆற்றலும் காணப்பட்டமையினாலேயே தனக்கான துறையினை சரியாக இனங்கண்டு சாதித்துக் காட்ட முடிந்தது. இது போன்ற ஏராளமான சாதனையாளர்களை உலக வரலாறு பதிவு செய்திருக்கிறது. சாதித்தவர்கள் அத்தனை பேரும் தங்களுக்குப் பொருத்தமான துறையினைத் தேர்ந்து அதில் முயற்சித்து வெற்றிபெற்றவர்களே அன்றி இது தான் எனப் பிறர் காட்டிய பாதையில் சென்று காலத்தை வீணடித்தவர்கள் அல்லர்.

இவர்களின் வரலாறுகளில் இருந்து மாணவர்கள் நிறையப் படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இன்று நிறையப் பெற்றோர் தம் பிள்ளைகளால் இயலாத பல துறைகளைத் தெரிவு செய்ய வழிப்படுத்துகின்றனர். இது அவர்களின் இயலாமையை மேலும் வலுப்படுத்துவதாய். அமைகின்றது.

எனவே மாணவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் தம்மால் முடியும் என்று இனங்கண்ட துறையினைத் தேர்ந்தெடுத்து முயற்சித்து வெற்றி காண வேண்டும்.

திருமதி. தமயந்தி கெங்காதரன்
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு

"கற்க கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க கல்வி என்பது இந்த உலகில் உள்ள சிறப்புவாய்ந்த விடயமாக மதிக்கப்படுகின்றது.

"கல்வி ஒன்றே இந்த உலகை மாற்றக்கூடிய சக்தி வாய்ந்த ஆயுதம்" என்பது நெல்சன் மண்டேலாவின் வாக்கு. ஒரு மரத்திற்கு எப்படி அதன் வேர் முக்கியமோ அது போலதான் மனிதனுக்கு கல்வி. இன்றைய கால கட்டத்தில் கல்வி என்பது அடிப்படை தேவையாக மாறி விட்டது. ஆனால் கல்வியை மட்டும் வைத்து கொண்டு மனிதன் உயரிய நிலைக்கு செல்ல இயலாது. வாழ்க்கை மேம்பட கல்வி அவசியம் தான் எனினும் நல்ல பண்புகளும் வாழ்க்கையில் மகிழ்ச்சியும் இருந்தால் தான் வாழ்க்கை சிறப்புற விளங்கும். ஆதலால் மனித வாழ்க்கை மேம்பாடடைய கல்வி மட்டும் போதாது எனும் கருத்தை ஒட்டி இந்த கட்டுரை அமைகின்றது.

கல்வி கற்பதால் நாம் நம் வாழ்வில் உயர் நிலைக்கு செல்லமுடியும். நன்றாக படித்தால்தான் நல்ல வேலையை பெற முடியும். நல்ல வேலை என்று குறிப்பிடுவது. இரு கைகளை நிரப்பும் அளவுக்கு சம்பளத்தை கொடுக்கும் சம்பளம் பெரிதாக இருந்தால் நம்மால் நல்ல வீடு, வாகனம், நகை போன்ற ஆடம்பரத்தை அனுபவிக்கலாம். நினைத்த பொருளை வாங்கலாம். நல்ல கல்வியினால் ஆடம்பரத்தை பெற்றுக் கொள்வதோடு நல்ல நிலையும் உருவாகும்.

ஆனால் நாம் பொருளாதாரத்தில் மட்டும் மேம்பட்டால் போதுமா? இல்லை. பிறரை மதித்தலும் நம் வாழ்வை மேம்படுத்தும். பிறர் நம்மை பார்த்து மதிப்பது நல்ல பண்புகளைக் கொண்டே ஆகும். கல்வி மட்டும் ஒருவனுக்கு போதும் என்றால் அவர்களுக்கு ஏன் பாடசாலையில் இணைப்பாட விதான செயற்பாடு நடாத்தப்படுகின்றது? மனிதர்களின இந்த பண்புகளுக்கும் வாழ்க்கையில் மதிப்புள்ளதே, காரணம் தவறில் இருந்து கற்று கொள்ளுதல், விடாமுயற்சி, தோல்வியில் இருந்து மீளும் தன்மை போன்ற நற்பண்புகள் உடையவன் கடவுளை விட உயர்ந்தவனாக இச் சமுதாயத்தில் மிளிர்கின்றான். இத்தகைய பண்பு ஒரு மனிதனுக்கு அவசியம் "ஒழுக்கம் உயிரென ஓம்பப்படுகின்றது" என்பது முதுமொழி. இந்த முதுமொழியில் மனித வாழ்க்கையில் பண்புகளுக்கு கொடுத்த முக்கியத்துவம் புலப்படுகின்றது. ஆகையால் பிறர் நம்மை பார்த்து மதிப்பது அவர்களின் எடுத்துக்காட்டாக பார்ப்பது நாம் வாழ்ந்த வாழ்க்கையில் வெற்றியடைந்துவிட்டோம் என்பதற்கு முக்கிய ஆதாரமாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மனித வாழ்வை மேம்படுத்தும். எனவே நற்பண்புகள் மூலம் நமது மதிப்பு உயர்வதும் நமது வாழ்வு மேம்படுவதும் உறுதியாகும்.

இன்றைய காலகட்டத்தில் மகிழ்ச்சி என்ற சொல்லுக்கு பொருள் மாறிவிட்டது. நமது வாழ்க்கையை மேம்படுத்த நாம் தொடர் வெற்றியை தேடி அலைகின்றோம். அதனால் நாம் மகிழ்ச்சியை தொலைத்து விட்டோம். இருப்பினும், வாழ்க்கையை மேம்படுத்துவதோடு வெற்றியையும் தேடித்தரக்கூடியது. மகிழ்ச்சி ஒன்றுதான் என்பதை நம்மில் எத்தனை பேர் அறிவோம்? பணத்தை ஈட்டுவதற்கு அல்லும், பகலும் உழைத்து குடும்பத்தை மறப்பது இன்றைய காலத்தில் இயல்பானதொன்று ஆகும். பொருள் ஈட்டுவதன் மூலம் மகிழ்ச்சி தரும் பொருட்களை வாங்கலாம் ஆனால் உண்மையான மகிழ்ச்சியை வாங்க இயலாது என்பதே உண்மையாகும்.

மகிழ்ச்சியிருந்தால் தான் வாழ்க்கை உயர்நிலையடையும். மகிழ்ச்சியைத் தொலைத்தவன் அவன் வாழ்வை தொலைக்கின்றான். குடும்பத்தில் பிரச்சினைகள் இன்றி மகிழ்ச்சியாக இருப்பது, வாழ்க்கை சூழ்நிலையை மாற்றியமைக்கும் இதனால் வாழ்க்கை தரம் உயரும், வாழ்க்கை அழகாக மாறும். வாழ்க்கை வாழ்வது என்பது அதில் கிடைத்த அனுபவத்தை பெறல் ஆகும். வாழ்க்கை என்ற சமையலில் மகிழ்ச்சி என்ற சரக்கு இருந்தால் தான் வாழ்வு சுவைக்கும். மகிழ்ச்சியாக இருந்தால் நல்ல அனுபவம் பெற முடியும் இதனால் நிச்சயம் வாழ்வு மேம்படும்.

நல்ல கல்வியின் மூலம் பொருள் கிட்டும் அதனால் நம்மால் ஆடம்பர வாழ்க்கை வாழ இயலும். நல்ல பண்புகளுக்கு வாழ்வில் முக்கிய இடம் உண்டு. இவையும் வாழ்வை உயர்த்தி மேம்பாடடைய செய்யும். வாழ்க்கை என்பது மனிதருக்கு கிடைக்கும் வரம்.

ஆகவே,

எமது வாழ்வை போற்றுவோம், மேம்படுத்துவது நம் கையில் உள்ளது. ஆகவே வாழ்வை ஒரு பயணமாக எண்ணி நாம் வாழ்ந்து முடியும் வரை வாழ்வை இரசிப்போம்.

துசியந்தன் டிலக்ஷனா
2021 Arts

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பருவமும் அரசியலும்

மாணவப் பருவம் என்பது தனி நபரின் வாழ்வில் முக்கிய பருவமாகும். எதையும் ஏன்? எதற்கு என்று ஆராயும் பருவம் அது பாடசாலைக் கல்வியோடு இவ் உலக நடப்பினையும் உற்று நோக்கும் திறன் எட்டிப் பார்க்கும் பருவம். பகுத்தறிவைப் பயன்படுத்த தெரிந்து கொள்ளும் பருவம். எந்த ஒரு செய்தியையும் அப்படியே கண்மூடித்தனமாக நம்பாமல்

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு"

எனும் வள்ளுவர் வாக்கைப் புரிந்து பயிற்சி எடுக்கும் பருவம் எனலாம். வாழ்வில் முதல் 20 ஆண்டுகள் கற்கும் பாடசாலை கல்வியே எஞ்சியிருக்கப் போகும் நம் வாழ் நாட்களில் நம் வாழ்வை நடாத்தி பலம் தரக்கூடியவை. ஆதலால் கல்வி கற்கும் பருவத்தில் சமூக நடப்பை, சமூக ஏற்றத் தாழ்வுகள் தொடர்பான பார்வையை வளர்த்துக் கொள்ளலாமே, தவிர நேரடி அரசியலில் ஈடுபடுவதை தவிர்த்தல் நலம் பேணும்.

"மாணவர்கள் நேரடி அரசியலில் பிரவேசிக்காமல் இருக்க வேண்டும்" என்பதை ஒரு பக்கச்சார்பாய் ஏற்றுக் கொண்டாலும், அவர்கள் தம் சமூக விஷயங்கள், யதார்த்த வன்மைகள், சுயமரியாதை தனித்துவம் போன்ற விடயங்களை கற்றாராய்ந்து முன்னேற வேண்டியது அடிமைக் கல்வியை விடவும் அவசியமான தொன்று என்று கருதுகின்றேன்.

"ஏன் மாணவர்களுக்கு நேரடி அரசியல் ஆகாது" என்கின்ற எண்ணக் கோட்பாட்டை ஆராயும் போது, பதிலாக அமைவது

* மாணவர்கள் குழந்தைகளுக்குச் சமானமானவர்கள்,
* சமீபத்தில் உள்ளதைப் பற்றுகிறவர்கள்
* பின் விளைவை அனுபவித்து அறியாதவர்கள்
* கண்ணோட்டம் விழுந்தால் பற்றி விடுபவர்கள்
* எழுச்சி என்பது எங்கெங்கு காணப்படுகின்றதோ, கூட்டம் குதூகலம் எங்கு காணப்படுகின்றனவோ அவற்றை எல்லாம் பற்றிக் கொள்வதும், அவை மறைந்தால் கைவிட்டு விடுவதுமான குணமுடையவர்கள்.

மாணவர்களுக்கு வெறும் உற்சாகமும், துணிவும், தியாக புத்தியும் இருந்தால் மாத்திரம் ஆகாது,

* நன்மை, தீமையை அறியும் குணமும்
* சாத்தியம், அசாத்தியம் பற்றித் தெரியும் குணமும்
* ஆய்ந்து, ஓய்ந்து பார்க்கும் தன்மையும் இருந்தால் தான் மாணவர்கள் நாளைய சிறந்த தலைவர்களாகவும், சமுதாயத்திற்கு பொதுவில் பயன்படக் கூடியவர்களாகவும் ஆவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மாணவர்கள் இன்றைய சூழலில்

* சுயமாக சிந்திக்க பழக்கப்படுத்துவதே இல்லை,
* பகுத்தறிவை உபயோகிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படுவதும் இல்லை,
* அறிவிற்கும், அனுபவத்திற்கும் சம்மந்தப்படுத்தி பழகுவதேயில்லை

இத்தகைய நிலைமை மாறாதவரை மாணவர்கள் சுயமாக சிந்தித்து பார்த்து, ஆராய்ந்து தாங்களே ஒரு முடிவுக்கு வருவது முடியாததாகும். மேலும் வயதுக் கோளாறில் ஒரு செய்தியை பற்றிக்கொண்டு பின் அதில் பற்றுதல் போனதும் அதற்கு நேர் எதிரான செயல்களில் ஈடுபடுவது மாணவர்களின் போக்காகின்றது. எனவே அறிவு கொண்டாராய்ந்து ஒரு செயலைச் செய்ய அவர்களுக்கு மாணவப் பருவம் ஏற்புடையதன்று.

ஆனால், மாணவர்கள் அரசியலை அறிவது அவர்கள் எதிர்கால அரசியல் முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும் விவேகானந்தர், பாரதி, இராமாயணம் பற்றிப் பேச அனுமதி ஒரு கல்வி நிறுவனத்திற்கு உண்டு எனின் சமத்துவ சிந்தனைகளை விதைக்கும் தத்துவங்களை எடுத்து சொல்லும் உரிமையும் உண்டு. ஆதலால் சமூக அரசியல் பேசுவது மாணவப் பருவத்தில் தேவையானதொன்று. ஆனால் நேரடி அரசியல் ஈடுபாடு கொண்டு செயலாற்ற அவர்கள் மனதாலும் சிந்தனையாலும் முதிர்ச்சி அடைய வேண்டியுள்ளது.

மற்றும்,அரசியல் பற்றிய அடிப்படை அறிவின்மை, வெறுப்பு, வேற்றாளர்களின் சிந்தனை சார்பு, தலைமுறை வழி வந்த கருத்துக்களை செவி சாய்த்தல் போன்ற காரணங்களால் பல கன்னி வாக்காளர் மாணவப் பருவத்தில் இருந்து வெளிவந்தவர்கள் தம் வாக்குகளை அளிக்காமல் வெற்று வியாக்கியானம் பேசியதை கண்ணூடாய் காணக்கிடைத்தது கவலையே.

இந்தப் போக்கை மாற்றும் நிலையில், மாணவரிடத்தில் அடிப்படை அரசியல் பேசப்பட வேண்டும். மாற்றத்தை நாடுபவர்கள் தாங்கள் மக்கள் ஆட்சியின் வாக்களிக்கும் உரிமையை, கடமையை நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படை அறிவினையும், தெளிவினையும், கொண்டிருக்க வேண்டும். மேலும் தங்கள் முன்னேற்றத்திற்காக உழைத்த தலைவர்கள் வரலாற்றில் நம்மவர் கடந்து வந்த பாதைகள் பற்றி கற்றறிய வேண்டும். மாணவர்களின் அடிப்படை புரிதலே பின்னாளில் உணர்ச்சிகளின் அடிப்படையில் ஒன்று கூடுவது பின் போராட்டங்களில் வன்முறையை செலுத்துவதும் ஆரோக்கியமான சமூகத்திற்கு ஏற்புடையதன்று. எனவே மாணவர்கள் ஒரு தவம் போன்று பாடசாலை காலங்களில் படித்து அந்தப் படிப்போடு இந்த சமூக அரசியல் அறிவையும் அறிந்து நாளை நேரடி அரசியல் கலத்திற்கு வருவதே வளமான அரசியல் பாதைக்கு சரியானதாய் அமையும் என்கின்ற எண்ணக்கருவை இங்கே பதிக்கின்றேன்.

திருமதி.I.அனுராஜா (ஆர்த்தி)
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தப் பிரிவு நாளில்...

பழகிய நெஞ்சங்கள்
பிரிகின்ற நேரங்கள்
எண்ணத்தில் நெஞ்சத்தில்
எண்ணற்ற பாரங்கள்...

எட்டு மணி நேரம்
வீட்டை விட்டு பிரிந்தோம்!
நண்பர் கூட்டம் கை கொடுக்க
வருந்தும் நெஞ்சம் சிரித்தோம்!

சில நேரம் படிப்பு!
பல நேரம் துடிப்பு!
அழகானதோர் நடிப்பு
அந்த வாழ்க்கையில்
எத்தனை மிடுக்கு!

மீண்டும் மீண்டும் சேர்கையில்
எங்கள் நட்பின் உறவை
இரும்பாக்கினோம்.

கரும்பான நட்பு
குறும்பான காலம்
கலங்காத நினைவு....
சுகங்கள் மறைந்து சுமைகள்
தோன்றும்
நட்பின் கண்ணில்
கலங்கும்
கண்ணீர்

சந்தித்த இடங்கள்
நடந்திட்ட தடங்கள்
சுவடாய் அமையும்
எதிர்காலத்தில்...

புகைப்படமும் கையெழுத்தும்
நீங்காத இடம் பிடிக்கும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகத்தில் மட்டுமல்ல எங்கள்
நெஞ்சத்திலும்...

கல்லான நெஞ்சமும்
கண்ணீர் கசியும்
பிரிவான நேரம்..!

என்றாவதொருநாள் நண்பனை
எதிர்காண
கேட்ட குரலோ! என நெஞ்சம் விழி
காண
நண்பனே! என
உள்ளம் உறவாடக் கண்டு பேசி சில நேரங்கள் பின்னர்
மீண்டும் அவரவர் பாதையில்!

குழந்தையென மாற நெஞ்சம்
கேட்கும்.
நண்பனின் தொலைகண்கள்
எதிர்நோக்கும்
இக்காலம் இனி என்றும் வருமோ
என விழிகளில் நீர் தேங்கும்
இதோ பிரியும் நேரம்!
நண்பர்களுக்கு மட்டுமே
நட்புக்கல்ல.....

பு. தனிஸ்கா
2021 கணிதம்


எதற்கும் தயாராக இருக்க
வேண்டும்
ஒருநாள் நமக்கான வாய்ப்பு
வரும்..
ஆபிரகாம் லிங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் அமுக்க சக்தியால் இயங்கும் செயற்கை கால்

நாளுக்கு நாள் விஞ்ஞானம் பல பிடிப்புக்களை கண்டு பிடித்துக் கொண்டு வருகின்றது. அதன் ஒரு வடிவமாக ஒரு முழங்காலுக்கு மேல் ஊனமுற்றவர்களுக்காக அவர்கள் இயல்பாக நடக்க உதவும் வகையில் நான் கண்டுபிடித்த இந்த நீர் அமுக்க சக்தியால் இயங்கும் செயற்கை கால் அவர்கள் இயல்பாக நடக்க வழிவகுக்கும்.



**பயன்பாடு :**

ஒரு முழங்காலுக்கு மேல் ஊனமுற்றவர்கள் ஊன்றுகோலின் உதவியுடன் வாழாமல் அவர்களும் அனைத்து மக்களைப்போல் இயல்பாக நடக்க இந்த நீர் அமுக்க சக்தியால் கண்டுபிடிக்கப்பட்ட கால்களை பெருத்தி நடக்க முடியும். இதனை வறியவர்களும் பயன்படுத்தக் கூடிய வகையில் எழிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**செயல்படும் முறை :**

இயல்பாக செயற்படும் முழங்காலில் செயற்கை காலில் ஒரு பகுதியை பெருத்தி ஊனமுற்ற காலில் மற்றைய காலைப்பொருத்தி இயல்பாக இயங்கும் காலை மடிக்கும் போதில் இயல்பாக இயங்கும் காலில் பொருத்தப்பட்ட முசலத்தின் ஊடாக நீர் அமுக்கப்பட்டு குழாயின் ஊடாக நீர் சென்று ஊனமுற்ற காலில் பெருத்தப்பட்ட செயற்கை காலில் முசலத்தை அடையும் போது செயற்கைகால் முன்செல்லும். பின்னர் செயற்படும் பகுதியை (கால்) விரிக்கும் போது முசலத்தில் நீர் உறிஞ்சப்பட்டு ஊனமுற்ற காலில் பெருத்தப்பட்ட முசலத்திலிருந்து நீர் உறிஞ்சப்பட்டு ஊனமுற்ற கால் மடியும் இச் செயல்பாடு மீண்டும் மீண்டும் தொடர்ச்சியாக நடைபெறும் போது முழங்காலுக்கு மேல் கால் இல்லாதவர்கள் நடக்க முடியும்.

K.ருபஸ்ரீ
2020 கணிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சி!

மானிட இதயங்கள் இணைவதனால் - இந்த
மனதினில் பிறப்பது மகிழ்ச்சி!
நானில் மாந்தர்கள் தேடிடும் நிம்மதி
நாடியே வந்திடின் மகிழ்ச்சி!

ஐயிரு திங்களும் அல்லல்கள் தாங்கியே
அன்னையாய் மாறிடின் மகிழ்ச்சி!
மையிருள் கிழிந்தொரு மதிமுகம் காட்டிட
மல்லிகை மலர்கையில் மகிழ்ச்சி!

அழுதிடும் மழலையின் உள்ளங்கால் பட்டதும்
அன்னையின் மனதினில் மகிழ்ச்சி!
காலையில் கதிரவன் கண்விழித்தெழுந்திட
விவசாயி மனதிடை மகிழ்ச்சி!

இயற்கையின் அழகினில் இனிமைகள் கண்டவர்
மனதினில் உணர்வது மகிழ்ச்சி!
துன்பங்கள் மறந்து உள்ளங்கள் களித்திட
உணர்ச்சியில் சிறந்தது மகிழ்ச்சி!

T.வினுசாந்
2020 உயிரியல்



**உன் மீது**
**உனக்கே**
**நம்பிக்கை**
**இல்லை**
**என்றால்,**
**கடவுளே நேரில்**
**வந்தாலும்**
**பயனில்லை...**
**--விவேகானந்தர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாம் போதைப்பொருள்

வேண்டாம் வேண்டாம் தம்பி!
புகைத்தலும் மதுவும் வேண்டாம் வேண்டாம்
இவை உன் தலைவிதி – அதை
தலைகீழாய் மாற்றிடும்!

உன் சிவந்த உதடுகள்
சிதைந்து போகுமே
அழகிய முகம் அது
வரட்சி காணுமே!

புத்தியை கெடுத்து
புற்று நோயை வளர்த்திடுமே!
புன்னகையை மறந்து
புதுப்பொலிவை இழந்திடுமே!

புகையை பிடித்தவனும் மதுவை குடித்தவனும்
கஞ்சா, மாவா பாவித்தவனும்
வலுவிழந்து இருமுவது தான்
மிச்சமடா தம்பி!




அடித்தவனும் பிடித்தவனும்
ஊத்தி ஊத்தி குடிக்கிறான்
அணைத்தவனும் அறைந்தவனும்
ஊதி ஊதி இழுக்கிறான்

கடைசியில் போதை
அதிகமாகி இன்னல்
பட்டு வருந்தவே நேருமடா தம்பி! – ஆகையால்
உன் தலைவிதியை மாற்றிட நீயே முயன்றிடு!

S.குபேனி
2022 உயிரியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்கரை விளக்கு

தன்னிலே நிகரற்று உலக நீரோட்டத்தில் தள்ளாடும் கப்பல்களாம் மாணவர் எமக்கு கலங்கரை விளக்கமாய் நின்று கல்வி எனும் ஒளியினால் கரைசேர்க்கும் கலைமகளின் மூர்த்தங்களாய் விளங்குகின்ற பாடசாலைகள் மதிக்கப்பட வேண்டியவை.

பாடசாலைகள் இன்றேல் மானுடம் எனும் மாண்பு மனிதரிலே புதைந்து மனிதம் என்றொன்றுள்ளதை மறந்து போக நேரிடும். மானுடம் இன்றேல் மனிதமுமில்லை; மனிதனுமில்லை. ஏனெனில் மனிதனை அடையாளமிடும் பகுத்தறிவை கொணர்வது பாடசாலைகளே. அறிவு, ஆற்றல், சிந்தனை, இலட்சியம், ஒற்றுமை, உயர்வு, நட்பு, நாட்டம் போன்ற பண்புகள் இங்கே தான் விதைக்கப்படுகின்றன. ஆதலால், பாடசாலைகள் ஒவ்வொன்றும் கற்றலுக்குரிய தளங்களாகவும், கற்பித்தலுக்குரிய களங்களாகவும் அமைந்துவிடுகின்றன. கற்றல் /கற்பித்தல் என்பது வெறுமனே புத்தகத்தை மனனம் செய்து, பரீட்சைகளில் வாந்தி எடுக்கச் செய்து வரும் இக்காலகட்டத்திலே பாடசாலைகள் சமூகங்களுக்கு பெரும் பணியாற்றுகின்றன.

பாடசாலை ஒன்றினது கற்பித்தல் நடவடிக்கையானது ஒழுக்கம், கல்வி, உயர்வு எனும் முத்தீபங்களை மாணவரிலே ஏற்றும் செயற்பாடாகும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

ஒழுக்கமானது நற்சான்றைத் தருகிறது. ஒழுக்கமில்லாத ஒருவனிடத்தே கல்வி எனும் வித்து முளைக்க முடியாது. அவன் உழப்படாத நிலத்திற்கும், மண்ணில்லா பாறைக்கும் ஒப்பானவன். மண்ணின்றி விதை எவ்வாறு முளைக்க இயலாதோ அவ்வாறே ஒழுக்கமின்றிய அகம் தனிலே கல்வி ஒளி வீசவும் முடியாது. ஆகவேதான் பாடசாலைகளின் முதலானதும், முனைப்பானதுமான செயற்பாடு மாணவர்களிடையே ஒழுக்கவிழுமியங்களை ஏற்படுத்துவதாக அமைகின்றது. "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பார்கள். ஆகவே ஒழுக்கமானது சிறுவயதிலிருந்தே ஊட்டப்பட வேண்டியதாகும்.

அதற்காகவே பாடசாலைகள் எம்மை ஆறுவயதினிலேயே அழைத்துக் கொள்கின்றன. ஆனால் வயிறாற உண்பதற்கு மாணவர்களாகிய நாம் தான் தயாரில்லை. உண்ண மறுக்கும் குழந்தையை தாய் எவ்வாறு உண்ணச்செய்கிறாளோ, அதேபோலவே பாடசாலைகளும் தயாரில்லாத மாணவர்களை சட்டங்களால் தயார்படுத்துகின்றனர். இத்தயார்ப்படுத்தலானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளின் இரண்டாவது நோக்கத்தை நோக்கிய பயணத்தில் காலடி பதிக்க வைக்கிறது.

பாடசாலைகளின் நோக்கத்தின் அடுத்தபடி கல்வியாகும். எந்தவொரு மாணவன் கல்வியை பெற்றுக் கொள்கிறான் என நோக்கும் போது அவன் ஒழுக்கத்தை தலைசிறந்த போதனையாக கொண்டவனாக மட்டுமே இருக்க முடியும். கல்வி என்பது இங்கு மனிதனை அபிவிருத்தி பாதையில் வழிநடத்தும் ஊன்று கோலாகும். இது கொடுக்கும் போது குறையாத செல்வமும், எடுக்கும் போது ஊறுகின்ற திரவியமுமாகும். இதனைக் கண்டு கொள்ளச் செய்வோர் ஆசிரியர்கள் தாம்.

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்பார்கள். இக்கூற்று நோக்குதற்குரியது. எழுத்தறிவிப்போர் ஆசிரியர்கள். இவர்கள் இறைவனை போன்றவர்கள் என்று இது கூறவில்லை. மாறாக ஆசிரியர்கள் தான் இறைவன் என்று கூறுகிறது. இத்தகைய பெருமை மிக்க ஆசிரியர்கள், எவ்வாறு இறைவன் தன்னிடம் வருவோரிடம் வேறுபாடு காட்டாது அருள் புரிவது போல தாமும் கற்பிக்கும் போது மாணவர்களிடயே ஏற்றத்தாழ்வு காட்டாதிருக்க கடமைப்பட்டுள்ளனர். மாணவர்கள் தம் காதுகளை அகல விரித்து ஆசிரியர்களின் கற்பித்தலுக்கு செவிமடுக்க வேண்டும். இச் செவிமடுத்தலும், அவதானிப்பும் பாடசாலைகளின் இறுதி நோக்கான உயர்வுக்கு எம்மை இட்டுச் செல்லும்.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் - மற்றவை
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"

ஆகவே,

மாணவர்களிடையே உயர்வான சிந்தனைகள் முளைக்க வேண்டும். அது முதலில் நல்லாசான்களால் விதைக்கப்பட வேண்டும். விதையில்லாமல் ஒன்று எவ்வாறு முளைக்க முடியும்? நல்ல உயரிய சிந்தனைகள் முளைத்து நன்றாக வேரூன்றி கிளைகள் பரப்பி பெரும் ஆல்விருட்சமாய் நின்று பயன் தரும். தேவையானது சிறு விதையாகிய நற்சிந்தனையே.அதேவேளை வேரூன்றி நிற்கும் நிலமாகிய பாடசாலைகள் தொடர்ச்சியாக நற்சிந்தனைகளை வழங்கி புத்துயிர் ஊட்டி உயரிய எண்ணங்களை மாணவர் மத்தியில் தோன்றச் செய்ய வேண்டும்.

இதற்கு உதாரணமாக தலைசிறந்த ஆசிரியர் ஒருவரைக் குறிப்பிடலாம். அவர் மாணவர்களைச் சந்திக்கும் போதெல்லாம் கூறும் வார்த்தை "கனவு காணுங்கள்". தொடர்ந்து சொல்லுவார், "தூங்கும் போது வருவது கனவு அல்ல, உன்னைத் தூங்கவிடாமல் செய்வதே கனவு" என்று ஆக, ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளும் கலாநிதி அப்துல் கலாமைப் போல மாணவர்களை உயர்வானவற்றை எண்ணுவதற்கு ஊக்கப்படுத்த வேண்டும்.

பாடசாலைகளில் தரப்படும் கல்வியானது வெறுமனே புத்தகங்களை மட்டும் சார்ந்திருப்பதில்லை. அது விளையாட்டு, மொழி, கலாசாரம், சமயம், இலக்கியம் போன்ற பல்துறை பாடங்களாக வியாபித்துள்ளது. இவ்வாறு, இவன் மனிதன் எனும் சான்றிதழை கொடுத்து மனித வாழ்விற்கான நுழைவுச் சீட்டுகளைக் கொடுத்து வழியனுப்பி விட்டும், மறுபுறம் மீண்டும் தன் பணியைச் செய்யும் பாடசாலைகள் மதிப்பிற்குரியவை.

"ஒரு நூலகம் திறக்கப்படும் போது
100 சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன."

"ஒரு பாடசாலை செவ்வனே செயற்படும் போது
ஆயிரமாயிரம் புத்தகசாலைகள் வடிவமைக்கப்படுகின்றன."

E.J.சதுசன்
2022 உயிரியல்

---



கனவு காணுங்கள்
ஆனால் கனவு என்பது
நீ தூக்கத்தில் காண்பது அல்ல
உன்னைத் தூங்க விடாமல்
பண்ணுவது எதுவோ
அதுவே (இலட்சிய) கனவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி நாட்கள்

கதற கதற தனியாக
கண்முன்னே தவிக்கவிட்டு
கண்ணீர் தாரையில்
காணாமல் போன நாள் அன்று

கை பிடித்து செல்பவர் ஆசான்
அருகில் இருப்பவன் தோழன் என எவரோ
என்னிடம் மொழிய

ஏன் இங்கே வந்தோமென்று
எண்ணும் முன்னே – எனை
போல பலரும் அதை
எண்ணிய வண்ணமே

நாட்கள் செல்ல செல்ல
நான் சுமக்கும் பைச்சுமையும்
கூட – எனையறியாமல்
என்னில் எழுந்த ஐயமும் கூடியது

பென்சிலுக்காக கூட்டாளியுடன்
சண்டையிட்டதும் - முதல் தடவை
பேனாவால் எழுதும் போது
கூடவே வந்த இன்பமும்

என்னில் எழுந்த துயரத்தை
கேட்ட தோழி – கண்துடைத்து
மடிதந்து தோள் சாய்ந்து
திடம் தந்தவள்

பிரிந்து செல்லும் நாட்களை
மறந்து வாழ்ந்த நாம் - ஏன் பிரியும்
போதுமட்டும் முந்தானைக்குள் முடிந்துக்கிடந்த
முன் நாட்களை அடைந்தோம்.

ச.திவ்வியா
2021 உயிரியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mr. Corona speaks...

Nowadays my name is very famous among the people in this world. I don't think that there are people who don't know my name. But my self-introduction is very important. My name is Mr. Corona and also people call me as covid – 19. I am very proud to say my name, because nowday I am a celebrity among people. I was born in china. No! No! No! Made is better than born. I was made in china. I am a chines product. The chines products are very famous all over the world. Like that I am also a famous product.


My presence is fill all over the world. I am an international figure without passport or visa. I can enter a country without any permission of the authority of the country. I can enter a country through sea, through plane or by road. To enter a country, I only need one thing that is a human body. Human body is my transportation source by one human. I can be spread to all the human.

The first human whom i was in is a Chinese person who lived in Wuhan city. After that as you know I was all around the world. I was named as a 'pandemic', because I am all over the world. But there are few countries where I couldn't enter. Those were Marshall Islands, Noury, Solomon Islands, Micronesia, Tongo, Twaly, Vantuaty, Twrlenenista by god's grace those people are lucky. But without these countries I have been living is 188 countries. If I enter a country at least 1000 of people will be affected by me. And also I will kill certain people also.

Up to now I have infected 27 million people worldwide and I have killed 849, 503 humans. I am very proud to say this. Among the countries where my presence, I have infected most people in USA. The second country which I infected most is India. These are my records.

If I enter a human body, I will give some symptoms to them. Those symptoms are fever, dry cough, tiredness and pains. If some of these symptoms are shows that means. I am in. If people want to be protected from me, they definitely want to wear a mask to be safe from me, and they need to wash their hands often. If a guy cough or sneeze, you need to maintain a social distance, because sometime I might be there.

**Coronavirus: Key symptoms**




The countries have been lock-downed to stop spreading. By that people got advantages also and same as disadvantages. If we see their family at home. The family bond has grown. People tried many new things during this lockdown. Gardening,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cooking are some of them. Students got the best of this. The schools also closed and students enjoyed their self at home. Many students thanked me for this.

As this advantage some as the other side there are lot of disadvantages from me. The economy of the world has been destroyed by me. And I created many problems between big countries, and they literally started a 'bio war' among them. Like these there are many disadvantages by me. I am very guilty to say this.

This was not my fault. I was made by humans. Now Russian's have found a medicine to kill me. I am very sad to say that. After few months I will be no more in this world. But my name Corona will be in history. And history will speak about me.

S. Harikeshon
2022 Bio






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயே என் தாய்...

"அ" என்ற சொல்லை அறியவைப்பதற்கும்
ஆசையோடு என்னை அள்ளி எடுப்பதற்கும்
இசையால் என்னை மறக்க வைப்பதற்கும்
இறைவன் தந்த சொத்து என் தாய்!

கருவறையிலே சுமந்தாய் பத்துத் திங்கள்
கண்ணிமைக்குள்ளே பலநூறு திங்கள்
கட்டிளமை பருவத்திலும் கட்டுக்கடங்காமல்
காத்தவள் நீயே என் தாய்!

பாராட்டி சீராட்டி பாரில் வளர்த்தாய்
பலர் முன் பாராட்ட கூடியவளாய்
வராத துன்பங்களை நீ விலக்கி வைத்து - என்னை
நிறுத்தியவள் நீ என் தாய்!

வறுமை எனும் சொல்லோடு வாழ்வு இருந்தாலும்
வாடா முகத்தோடு வனப்பாய் இருப்பவள்
கண்முன்னே பலநூறு கஷ்டம் இருந்தாலும்
கவலைகள் சுக்கு நூறாய் போகும் உன்முன்னே

காலங்கள் மாறலாம் - ஆனால்
என்தாயின் கண்ணிமைக்குள்ளே இருக்கும்
உன்னை பற்றி கனவுகள்
நனவாகும் வரை ஒரு போதும் மாறாது.



தேவராசா சஞ்சிதா
2022 வணிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறு
# 1993 - 2019
## First Attempt only

| No. | Year | Stream | Applied | | | Sat | | | Pass | | | ⁒ | 3A | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | M | F | Total | M | F | Total | M | F | Total | | M | F | Total |
| 1 | 2019 | 6 | 69 | 33 | 102 | 69 | 33 | 102 | 38 | 21 | 59 | 57.84 | 1 | 2 | 3 |
| 2 | 2018 | 4 | 33 | 29 | 62 | 33 | 29 | 62 | 26 | 27 | 53 | 85.48 | -- | 2 | 2 |
| 3 | 2017 | 4 | 51 | 38 | 89 | 50 | 38 | 88 | 26 | 24 | 50 | 56.81 | -- | -- | -- |
| 4 | 2016 | 4 | 70 | 45 | 115 | 70 | 44 | 114 | 44 | 23 | 67 | 58.77 | 1 | 2 | 3 |
| 5 | 2015 | 4 | 72 | 42 | 114 | 71 | 41 | 112 | 36 | 26 | 62 | 55.35 | 2 | 2 | 4 |
| 6 | 2014 | 4 | 61 | 29 | 90 | 58 | 28 | 86 | 24 | 18 | 42 | 48.83 | 5 | -- | 5 |
| 7 | 2013 | 4 | 57 | 39 | 96 | 57 | 39 | 96 | 23 | 23 | 46 | 47.91 | 1 | -- | 1 |
| 8 | 2012 | 4 | 54 | 27 | 81 | 53 | 27 | 80 | 33 | 17 | 50 | 62.50 | 2 | | 2 |
| 9 | 2011 | 4 | 53 | 37 | 90 | 52 | 37 | 89 | 20 | 24 | 44 | 49.43 | -- | -- | -- |
| 10 | 2010 | 4 | 44 | 45 | 89 | 43 | 44 | 87 | 16 | 29 | 45 | 51.72 | -- | 2 | 2 |
| 11 | 2009 | 4 | 49 | 40 | 89 | 48 | 40 | 88 | 26 | 29 | 55 | 62.50 | 1 | 2 | 3 |
| 12 | 2008 | 4 | 48 | 29 | 77 | 48 | 29 | 77 | 28 | 18 | 46 | 59.74 | -- | -- | -- |
| 13 | 2007 | 4 | 17 | 39 | 56 | 17 | 38 | 55 | 7 | 25 | 32 | 58.18 | -- | -- | -- |
| 14 | 2006 | 4 | 45 | 31 | 76 | 43 | 30 | 73 | 20 | 18 | 38 | 52.05 | -- | -- | -- |
| 15 | 2005 | 4 | 46 | 32 | 78 | 46 | 30 | 76 | 20 | 19 | 39 | 51.31 | -- | -- | -- |
| 16 | 2004 | 4 | 34 | 24 | 58 | 34 | 24 | 58 | 22 | 15 | 37 | 63.79 | 1 | -- | 1 |
| 17 | 2003 | 4 | 27 | 34 | 61 | 27 | 34 | 61 | 11 | 20 | 31 | 50.81 | 1 | -- | 1 |
| 18 | 2002 | 4 | 35 | 38 | 73 | 31 | 37 | 68 | 15 | 21 | 36 | 52.94 | -- | 1 | 1 |
| 19 | 2001 | 4 | 30 | 27 | 57 | 28 | 27 | 55 | 17 | 18 | 35 | 63.63 | 1 | -- | 1 |
| | | | | | | | | | | | | | 4A | | |
| 20 | 2000 | 4 | 32 | 35 | 67 | 32 | 34 | 66 | 7 | 15 | 22 | 33.33 | -- | -- | -- |
| 21 | 1999 | 4 | 16 | 35 | 51 | 15 | 35 | 50 | 7 | 13 | 20 | 40.00 | -- | -- | -- |
| 22 | 1998 | 4 | 27 | 27 | 54 | 26 | 26 | 52 | 12 | 10 | 22 | 42.30 | -- | -- | -- |
| 23 | 1997 | 4 | 17 | 27 | 44 | 17 | 27 | 44 | 9 | 13 | 22 | 50.00 | -- | -- | -- |
| 24 | 1996 | 4 | 23 | 12 | 35 | 23 | 11 | 34 | 8 | 6 | 14 | 41.17 | -- | -- | -- |
| 25 | 1995 | 2 | 13 | 13 | 26 | 12 | 13 | 25 | 8 | 6 | 14 | 56.00 | -- | -- | -- |
| 26 | 1994 | 2 | 6 | 9 | 15 | 5 | 8 | 13 | 4 | 3 | 7 | 53.84 | -- | -- | -- |
| 27 | 1993 | 1 | 2 | 8 | 10 | 2 | 8 | 10 | 2 | 1 | 3 | 30.00 | -- | -- | -- |

## பாரதியார் நற்சிந்தனைகள்

* உள்ளத்தில் நேர்மையும் தைரியமும் இருந்தால் கால்கள் நேரான பாதையில் செல்லத் தொடரும்.
* யாமறிந்த மொழிகளில் தமிழ் மொழிபோல இனிதாவது எங்க காணோம்.
* வாழ்க்கையில் எப்பொதும் சமாதானத்தையம் சகிப்புத் தன்மையும் நமது இலட்சியமாக கொள்ள வேண்டும்.
* எவனையும் வெற்று காகிதம் என எண்ணாதே, ஒரு நாள் அவன் பட்டமாய் பறப்பான் நீ அண்ணாந்துதான் பார்க்க வேண்டும்.
* தனி ஒரு மனிதனக்கு உணர்வு இல்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடவோம்.
* தமிழ் ஒருவனக்கு ரௌத்திரத்தையும் கற்றதரும்
* செய்வதை துணிந்து செய்

K.மிதுஷாயினி
2022 கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# How thoughts influence our lives

An action can be defined as creating some energy and doing something in the physical world. A thought can be also defined similarly but it is imaging or doing something in the vary interface called mind. There is an old Zen saying "what we think frequently becomes an action, what we do frequently becomes a habit. So, we can understand, why our thoughts are very important for our lifestyle.

Law of attraction (LOA), a concept which all religions accept with their beliefs. It simply means "what we think, what we manifest". Everything in this world is interconnected within themselves here is an example, when we drop some wateron floor, it tries to move nearby where more water lays. This briefs the law of attraction that an energy.

People should be more optimistic and ignore the bad vibrations, in my opinion. Optimists tend to be hopeful and confident about their actions because they believe in themselves with their good energy flowing throughout their mind. So, they have abundance in their peace.

Most of the people manifest the bad vibration by thinking they're worthless and hesitant. Though, being a pessimist can also be motivated when they try to improve what they are lacking in, than just whining around. But, consuming a bad aspect about circumstances from the very beginning can also get pessimists in tremendous troubles.

You can be an optimist or a pessimist but what matters is how much we are striving to make the progress to be successful in the life. Hard work can beat luck and talent. So we must focus in time management and work accordingly. In our day plans to make our future shine. As a member of the younger generation, I all the best to be successful in life.

"no poison can kill a positive thinker,
No medicine can cure a negative thinker."

S. Dilakshan Rahul
2022 Maths

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்லூரி தினம் - 2020



தொழில்நுட்ப செயன்முறைப் பயிற்சி - 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செயன்முறைப் பயிற்சிக்காக ஜா-எலவில் நடைபெற்ற
தொழில்நுட்ப பூங்காவில் கலந்து கொண்டமை - 2020



தொழில்நுட்ப பிரிவின் விதைப் பந்து தயாரிப்பு - 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவர் விடுதி திறப்பு விழா - 2020



கிழக்கு மாகாண ஆளுநரின் வருகை - 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SPORTS MEET - 2020





**Carrom - 2020 இல் மாகாண மட்டத்தில் 1ம் இடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அகில இலங்கை புத்தாக்கப்போட்டியில் வெற்றி - 2019



ECON ICON - 2019 இல் தேசிய மட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்டமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொழில்நுட்ப பிரிவு கட்டிட திறப்பு விழா - 2019

CARNATIC MUSIC COMPETITION NATIONAL LEVEL



14 . 12 . 2K19 @ KANDY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகள்...

பாவையாய் பாலகனாய் - நீ
பள்ளி வந்த வேளையிலே – உன்
வருகையை நான் எண்ணி
காத்திருக்கவில்லையடா நண்பா!

அறியா வயதினிலே 'அ' எனத்
தொடங்கும் வேளையிலே – உன்
புரியா மொழிதன்னும் எனக்கு
புரியவில்லையடா நண்பா!




ஆரம்பப் படிப்பை முடித்து
அடுத்த படி செல்லும் வேளை - என்
நட்பு என்னும் மன அறையில்
நீயும் வந்து இணைந்து விட்டாய்!

ஆபத்து நெருங்கிய வேளை
அண்ணனாய் நீ தந்த அரவணைப்பு...
ஆனந்தம் அளித்த வேளை
அதில் உன் ஆர்ப்பரிப்பும் என் நெஞ்சில்
இன்று நீங்கா நினைவாய் சிறகடிக்கின்றது

பள்ளிப் படிப்பை முடிப்பதற்கு
பிரியாவிடை சந்தித்துப் பிரிந்த வேளை
அக்கணம் நான் எண்ணியது ஒன்றுதான்
கவலையல்ல கர்வம் கொண்டேன் - ஏனெனில்
இத்தனை நாட்களும் நீ எனது நண்பன் என்று எண்ணினேன்
ஆனால் அன்று தான் தெரிந்தது – என்
கண்ணீருக்கும் நண்பன் நீதான் என்று

இன்று என்னுடன் என் கண்ணீரும்
காத்திருக்கின்றது உன் பள்ளி நட்பை எண்ணி
கண்ணீருடன் எழுதுகிறேன்
உன் உயிர் தோழி........

லி.செந்தூரி
2022 வணிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The last wish

The situation become out of control because of the corona outbreak. By the plight of these people god gathered all the leaders of the countries in the world and covid – 19 virus in a figure which can talk and be seen by others for a judgement.

Then all the leaders came to abolish covid-19 form earth. They were in a decision to kill covid. So, God also decided to get rid of covid. So before killing him God asked covid "do you have any last wish?", then cpvid answered yes and expressed his last wish, "I want to transform these leaders in the form of other living beings back to the past, to the day before a week when I started to infect and get them back here after a week when I spread all over the world, then give them permission to kill me.

Then God decided to fulfill the last wish to covid and leaders also accepted it. Those leaders are sent back to past their countries in the form of animals, trees, insects and other living forms. They thought that the task was easy but it was not like that. Indian president came to India as a town cow, as time passed, he got hungry and went on search for fresh grass. But in that town he couldn't find any greenery items to eat so he decided to eat the remanat food the street sides in his excessive hungry. He ate it with polythene so severely fallen sick and died in two days. His last thought was that the people made our environment as even a cow can't find any fresh grass. He realized the animal is pathetic stage at his last minutes.

In other country that leader who was in form of deer wandered in search of water because of thirsty. Finally, she found a lake in that forest but she didn't see that there was a factory near to it and its wastes mingles into the lake. Because of the dangerous chemicals the deer died with the thought, that, "as this how many innocent souls are death every day.

Brazil's president came there as tree of the amazon forest. In the second day night infornt of his eyes a group of mischievous people. Kept fire in a small area and it turned as a wild fire. President also burned with the angry and a frustration about those people.

Other leaders also couldn't meet their need, then every one of them realized how this nature is over taken by humans and how the other living beings suffer. Meanwhile the china's president also surviving as a pigeon in Wuhan city. Unfortunately, he was trapped by some people and taken to a strange place and locked into a cage, it looked like a mini 200, because many wild animals were trapped in cages.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Then a guy, came there and opened the next cage, he took a bat form it and killed it. He took it to cook, then the president could see his death infornt of his eyes, then the guy opened the cage, suddenly a group of people with mask and special suits which are used to avoid virus infection, took that guy out. Then with this gap president pigeon escaped from the sky, that marked, where he was trapped, was sealed as prohibited area. That Wuhan's buys streets looked empty then he realized that was the day of the corona put break. At this time, he thanked covid to save his life and other animals in the cage.

In few days' corona virus spreaded all over the world. After some days the leaders who were in the forms of different living beings. Could notice a big difference from past few days.

In one side where humans are stucked in to their home. In another side animals could lead their life without problems. Also, some animals which are considered as rare and endangered species came to the view of other eyes.

Then the leaders realized that the earth was over taken by humans before the corona out break, and all the living beings are equal. This earth is not only for humans but also for all the living beings.

As they were realizing the earth of time period came for the last wish of covid. Then all of leaders gathered for God's is judgment.

Then with a smile covid said now you can kill me. The leaders gave a thankful look on covid instead of that angry look.

With a smile covid vanished form the earth, then everyone realized corona is not an evil power or a destruction force and it didn't come with the purpose of destruction. We have to face the consequence of it. Covid – 19 is a virus that came from bat and some wild animals, so the excessive consumption of it bring this pandemic to us, so only we can control of by keeping the nature balanced and consider that we are not the agent of the nature we are part of it.

Suddenly all the leaders and god were blured and everything became dark. Then the president of china could feel a light shone on coffee, that it was a dream. Even it was a dream, he decided to ban the consumption of wild animals and to take a look on rules about nature. He got out the room with a smile on his face by a glimpse on a pigeon that stood in the window.

K. Tharushan
2022 Bio

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை

செங்கதிரோன் கிழக்கடியில் தோன்றி மேற்கடியில் மறையும் அமைதி நிறைந்த மாலைப் பொழுது. சிறகடித்துப் பறந்து களைப்புற வீட்டுக்குச் செல்லும் வண்ணப்பறவைகளின் கூட்டம். இளம் காற்றில் இசைப்பாடும் மாமரங்கள் புது மலர் வாடும் தருனமது.

வாழ்வு ஒன்று வந்தாலே ஓர் மகிழ்ச்சியும் துயரும் அடங்கும். உலகில் எத்தனையோ பணம் உள்ளவர்கள் இருந்தும் ஒருசிலர் ஏனோ இடம், பொருள், இன்பம், உடை, கல்வி இன்றி ஒவ்வொரு நொடிப் பொழுதும் தவித்திடும் மனிதர்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர்.

தாயோ தந்தையே முகம் காணாது அரவணைப்பு இல்லாது உறவுகள் உடன்பிறப்புகள் என்று சொல்ல நாதியில்லாத "இருண்ட காட்டில் கட்டற்று அவிழ்த்து விட்ட வண்டு போல் காணப்படும் கௌரியின் நிலை இரங்கதக்கது.

கௌரி 7வயது சிறுபிள்ளை. சிறுவயதில் இருந்தே ஏழை குடும்பத்தின் அரவணைப்பில் தான் வளர்ந்து வருகிறாள். பாடசாலை பைதூக்கும் கையில் பிச்சைப் பாத்திரம் ஏந்தி நிற்கிறாள். மரத்தடியும், தெருவோரமே அவளது படுக்கை அறை. பிறந்ததில் இருந்தே தன் தாய் தந்தை என தெரிந்த இருவர் முத்தாயியும் ராமையாவும் தான். உறவுகள் உற்றத்தார் என்று சொல்வதற்கு கண்ணம்மை, குமார், நாதன் மட்டுமே.

இரவு 9.30 "அம்மா கௌரி இன்னும் படுக்களையா நீ" என்றாள். முத்தாயி "எனக்கு நித்திர வருதுமா படுக்கபோறன்..." என்றாள். மழலைக் கதையுடன். கௌரியை தூங்கவைத்துவிட்டு சூரிய உதயத்தை எதிர்பார்த்து காத்திருந்தனர்.

சூரியன் கீழடியில் மெல்ல வெளியே வரும் காட்சி கண்களை கொள்ளை கொள்ளும் திருக்காட்சி. கௌரி "சீக்கிரமா எழும்பு அப்பதான் போகமுடியும், நாலுகடைக்கு போனாதான் இன்னைக்கு புலப்பே நடக்கும் எழும்பு விடிஞ்சிரிச்சிபாரு" என்றார் முத்தையா. சினுக்கத்துடன் உடல் சோர்வால் எழுந்தாள் கௌரி. பிச்சைக்காக கடை ஓரங்களில் "ஐயா! அம்மா! தருமம் பண்ணுங்கம்மா, அம்மாதாயே பிச்சபோடுகமா நீங்க நல்லா இருப்பிங்க" என்ற வார்த்தைகள் கேட்பவரை மனமுடைய வைக்கும். "அம்மா கொஞ்சம் நில்லுமா காலு நோவுது நடகேலாது..." என்று அழுதபடி நடக்கிறாள் கௌரி.

கௌரி வாமா போகலாம் அப்பதான் நாலுகாசு வாங்களாம். என்று கூறியபடி உடல் சோர்வுடன் நடந்து சென்றனர். பாவம் கௌரி 7வயது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபிள்ளை மாங்கனி நெருப்பில் விழுந்து பொசுங்குமாற்போல் பிஞ்சுப்பாதங்கள் வீதியில் சுட்டு புண்ணாகின.

"ஏனய்யா யோவ் எல்லா கைகாலும் நல்லாதானே இருக்கு உழைச்சு சாப்பிடலாம் தானே கும்பலா குடும்பத்தோட பிச்ச எடுத்து திரியுறிங்க நானே கடனே ஸ்ட்டாயிட்டு எண்டு தலைய பிச்சிட்டு இருகன் உங்களுக்கு பிச்சையா வேனுமிப்ப.." நா கூசாமல் தருமம் கேட்டு வருவோரை திட்டிதீர்க்கும் அசுர குணம் படைத்த மனிதர்களும் பிரபஞ்சத்தில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். வசதியான வாழ்க்கை கைநிறைய பணம் வைத்திருப் போரை மட்டுமே உயர்ந்த இடத்தில் வைத்து வேடிக்கைபார்க்கும் இன்றய உலகு பிச்சைக்காரர்களையும் வறிய ஏழை மக்களை கால் தூசுக்கு கூட மதிப்பதில்லை.

"அம்மா எண்ட வயது பிள்ளைங்க எல்லாம் நல்ல புதுசட்ட செருப்பல்லாம் போட்டு இருக்காங்கம்மா, நானும் போட ஆசயா இருக்கம்மா. எல்லாரும் சைக்கில்ல போறாங்க நாமளும் சைக்கில்ல போகலாமா..." கௌரியின் இத்தகைய வார்த்தை முத்தாயியின் மனதை தூக்கிவாரிப் போட்டது. நம்மகிட்ட அவங்கமாதிரி அவ்வளவு காசு இல்லமா அவங்க நிறையகாசு வைச்சிருக்காங்க அதனாலதான் அவங்க வசதியா இருக்காங்க. நாமதான் ஏழைகளாச்சே நம்மகிட்ட அவ்வளவு காசு இல்லம்மா. என்று சோகத்துடன் கூறினாள் முத்தாயி. நம்மகிட்ட அவங்கள மாதிரி காசுவர என்ன செய்யனும்மா ஒரு தொழில் செய்யனும் கௌரி. தொழிலா அதுக்கு என்ன செய்யனும் அதுக்கு நாம நல்லா படிக்கனும்

"அப்பன்டா நான் நல்லா படிச்சி தொழில் செய்யனுமா...?" என்றாள் கௌரி. தனது மகளின் பேச்சைக் கேட்ட முத்தாயிக்கு வார்த்தைகள் வரவில்லை தன்மகள் பாடசாலைக்கு படிப்பதற்கு அனுப்பி வைக்க தன்னிடம் அவ்வளவு பணம் இல்லையே என்று உள்ளுக்குள் கதறினால் முத்தாயி.

கௌரி தினமும் பக்கத்தில் உள்ள பாடசாலையின் முன்னால் நின்று கொண்டு செல்லும் மாணவர்களை ஆர்வத்துடன் பார்த்தப்படி நின்று கொண்டிருப்பாள். அவளது ஆசைகளை பார்த்தால் கண்களில் நீர் பெருக்கேடுத்தோடும். "வடிவான செருப்பு, புத்தகம், நல்ல சட்டை எல்லாம் போட்டு பள்ளிகூடம் போறாங்களே நானும் இப்பிடி போக ஆசயா இருக்கு முருகா ஏன் எங்கள ஏழையா படச்சனி எங்ககிட்ட நல்ல காசு இருந்தா நானும் பள்ளி கூடம் போயிருப்பன் தானே..." வஞ்கமில்லாத குணம் கொண்ட கௌரியின் வேண்டுதல் கண்ணீர் பெருகச் செய்யும். இவளது ஆசை எண்ணங்களை அவளது தாய் முத்தாயி கேட்டபடி நிக்கின்றாள். தன் வயிற்றில் பிறக்காத கௌரியை தன் மகளை போல வளர்த்தேன். ஆனால் என்ன செய்வது நாங்களோ ஏழைகள் கௌரியின் பெற்றதாய் இப்போது இருந்திருந்தால் இப்படி வேதனை கஷ்டங்களை அனுபவித்திருக்கமாட்டாளோ என்னவோ. என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனவேதனையுடன் கண்ணீர் வடித்தாள் முத்தாயி. என்ன செய்வது இறைவனின் விதியோ இவர்கள் பிச்சை எடுப்பது என்று எழுதியுள்ளான் போல.

சூரியனை கடும் முகில்கள் சூழ குளிர் காற்றுபுயல் சருகுகளை வாரி சுழன்று வீசிட, மரக்கிளைகள் தாளமிட, பளிச் என்று மின்னி பார் முழங்க வைத்தது. "கௌரி கடும் மழபெய்யப்போது போல கெதியண்டு வா இந்த மரத்துக்கு கீழ நிக்கலாம்..." எல்லோரும் விரைந்து ஓடிச்சென்றனர். சூ என்ற இரச்சலுடன் கடும் மழைப் பொழியத் தொடங்கியது. தமக்கோர் வீடு வாசல் இன்றி காட்டில் வாழும் விலங்குகளைப் போல் தெருவும் மரத்தடியும்தான் கௌரியின் குடும்பத்தின் குடில். இத்தனை அல்லல்படும் ஏழை எளியவர்களும் தினம் தினம் கஷ்டத்துக்குள்ளாகி தான் வருகின்றனர்.


கூனி குறுகி மழையில் நனைந்து படி நிக்கின்றனர். யாவரும் எதிர்பாராத வேளை ஓர் கார் அவர்கள் நின்று கொண்டிருந்த மரத்தடியில் நின்றது. உள்ளே இருந்து ஒரு நபர் கையில் குடையுடன் இறங்கி வருகிறார். "ஹலோ நான் இந்த பக்கது பள்ளி கூடதுல அதிபர் என்ன எல்லாரும் இந்த மழையில நனயிரிங்க உங்க வீடு எங்க இருக்கு.." என்று கோட்டார். "ஐயா! நாங்க ஏழைங்க வீடு என்டு சொல்ல இந்த மரமும் தெருக்கடையும் தானுங்க. எங்களுக்கு இதல்லாம் பழகி போசி.." என்ற ராமையாவின் வார்த்தைகள் பாடசாலை அதிபரை கண்கலங்க வைத்தது. "இந்தப்பிள்ளை என்னோட பள்ளி கூடத்துக்கு முன்னாடி அடிக்கடி நிற்பாள். இவள் பள்ளிகூடத்துல சேர்க்கலாமே ஐயா!" "கௌரியை பள்ளிகூடம் போக ஆசை போல தெரியுது. "பள்ளிகூடத்துல சேக்கிறத்துக்கு எங்களுட்ட அவ்வளவு காசில்லங்க. நாங்க கடையில எடுக்கிற 4 காசு வயிற்றுப் புழப்புகே காணாதுங்க..." ராமையாவின் சோக கஷ்ட வார்த்தைகள் அதிபரை மனமிரங்க வைத்தது. "சரி நான் கௌரிய என்னோட பள்ளிகூடத்தில் என்னோட செலவில படிப்பிக்கிறன். என்ன? கௌரி உனக்கு பள்ளிகூடம் போக ஆசையா?..." "ஓ.." "ஐயா சீங்க கடவுலுங்க எங்களையும் கண்டு மனமிரங்கி உதவி செய்ய வந்த முதல் ஜீவன் நீங்க மட்டும்தான். எங்க வாழ்நால்ல உங்கள மறக்க மாட்டம்...." என்று கண்ணீர் வடித்து கூறினார் ராமையா.

தனது சுகத்தையும் சுயநலத்தையும் எதிர்பார்க்கும் மனிதர்களுள், நல்ல மனித நேயத்துடன் பிறருக்கு உதவிசெய்யும் ஜீவனும் உலகில் வாழ்ந்து கொண்டுதான் வருகின்றனர். வண்ணத்து பூச்சி தான் அழகிய சிறகை தென்றவில் உதைத்து பறக்க ஆசைப்பட சிறைபட்டு சிறு கூட்டில் பலமாதங்கள் பல கஷ்டங்களை தாங்கி பின் அழகிய சிறகுகளுடன் இயற்கைவையத்தை பார்த்து ரசிக்க வட்டமிடும் வண்ணது பூச்சியை போல் கௌரி பாடசாலைக்கு செல்கின்றாள்.

T. சாருஜன்
2021 கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார பௌத் (Electric Bouth)




கருவியின் பொயர் : புதிய வகை electric bouth. இக் கருவியின் மூலம் வலய மட்டத்தில் 2வது இடம் பெற்று மாகாண மட்டத்தில் கலந்து கொண்டேன்.

இக்கருவியின் பயன்கள் : கண்ணிற்கு பாதிப்பில்லாத வகையில் சிறிய துளைகளில் ஈயத்தை உருக்கி ஒட்டுவதற்கு பயன்படுகிறது.

தூரத்தில் இருந்தவாறே சிறிய இடங்களை உருப்பெருக்கி பார்ப்பதன் மூலம் பொருட்களை இலகுவாக ஒட்ட முடிகிறது.

இக்கருவி மிகவும் எளிய முறையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது. கைவில்லையின் உதவியுடன் தயாரிக்கப்பட்டது. இதில் பரும்படி செப்பமாக்கி, நுண் செப்பமாக்கி போன்ற பாகங்கள் காணப்படுகிறது. இப்பாகத்தின் மூலம் கருவியில் காணப்படும் வில்லையை எமக்கு ஏற்றவகையில் செப்பம் கொள்ள முடிகிறது.

வி.டினுக்சன்
2022 உயிரியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மொழிதல்...

எமது கல்லூரித்தாயின் மடியில் தவழ்ந்து, இன்று சிறகு விரிக்க காத்திருக்கும் எமது சகோதர, சகோதரிகளின் பிரியாவிடை நிகழ்வில் 'வையாளி - 3' எனும் சஞ்சிகையை தொகுத்து வழங்கியதில் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் புரவி வேகம் கொண்டு எழுந்துவரும் எமது கல்லூரியின் வெற்றித்தடமே (வையாளி) என்பதன் பொருளாகும். கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தேசிய, சர்வதேசம் வரை சாதனைக் கொடி நாட்டிவரும் எமது மாணவரின் சரித்திரங்கள் ஆவணமாக்கப்பட வேண்டியது அவசியமாகும். இந்த கைங்கரியத்தில் ஒரு பகுதியாக வையாளி எனும் இப்படைப்பின் மூலம் மெய்ப்பிக்கப்படுவதை எண்ணி மன நிறைவடைகின்றேன்.

'வையாளி - 3' என்ற இவ்வருடாந்த சஞ்சிகையை படைப்பதற்கு கலை இலக்கிய ஆக்கங்கள், சாதனையாளர்களின் தரவு, ஆசியுரைகள் என்பனவற்றை வழங்கிய அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கும் இந்த சிறப்பான கருமத்தை நிறைவாக முழுமையடைய செய்வதற்கு ஆலோசனைகளையும் இன்றியமையாத ஒத்துழைப்புக்களையும் வழங்கிய அதிபர்.திரு.க.ரவிதாஸ் அவர்களுக்கும் பொறுப்பாசிரியர். திரு.சு.சிவசங்கர் அவர்களுக்கும் குறுகிய கால இடைவெளியில் மிகச்சிறப்பாக நூலை வடிவமைத்து தந்த 'பென் விஷன்' அச்சகத்தாருக்கும் என் மனம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

நன்றி

இவ்வண்ணம்,
இதழாசிரியர்,
த. சிவசங்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Ben Vision Printers & Publication**
**Trincomalee - 0769000035**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org